Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 25 ஞாயிற்றுக்கிழமை (08.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 131

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடாத்த வலியுறுத்து

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்தப்படாதுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வலியுறுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று மற்றும் புதுககுடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் அறிவிககப்பட்டுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 11 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் நிறைவடைந்தும் தேர்தல் நடத்தப்படாதுள்ளன.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மாநகரசபை, வவுனியா நகரசபை என்பவற்றுடன், மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் 9 உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.வின் விசாரணைக்கு உதவ வேண்டும் இலங்கை



### ஐ.நா.செயலரின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடந்து முடிந்த இறுதிக்கட்டப்போரில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்ளக விசாரணைகளை இலங்கை அரசாங்கம் நடாத்தவுள்ளதாக அறிவித்திருந்தாலும் ஐ.நா. நடாத்தும் விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும். இதுவே ஐ.நா. பொதுச் செயலர் மற்றும் மனித உரிமை ஆணையாளரின் நிலைப்பாடு.

இவ்வாறு ஐ.நா.பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் நேற்று முன்தினம் ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்கிடம், போரின் இறுதிக்கட்டத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க தெளிவான அரசியல் திட்டம் அவசியம்

## புதிய அரசை வலியுறுத்தும் இந்தியா

THE ECONOMIC TIMES

(புதுடில்லி)

இலங்கையில் புதிதாக ஆட்சி அமைத்துள்ள அரசாங்கம் அங்கு நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் தெளிவான அரசியல் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரங்களுடன் தொடர்புடைய இந்திய அதிகாரிஒருவர் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக எக்கனொமிக்ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

இலங்கையில் புதிய அரசாங்கம் மேற்கொண்டுள்ள, நல்லெண்ண நடவடிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லெண்ணச் செயற்பாடுகளை இந்திய அதிகாரிகள் வரவேற்பதாக எக்கனொமிக் ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும், நாடாளுமன்ற உறுபபினர் சுமந்திரன் ஆகியோர்

(19) ஆம் பக்கம் பார்க்க


### கூட்டமைப்பு மாகாணசபை உறுப்பினரால்
## காதலித்து ஏமாற்றப்பட்ட யுவதி தற்கொலை முயற்சி

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பு வடமாகாணசபை உறுப்பினர் ஒருவரால் காதலித்து ஏமாற்றப்பட்டு அநாதரவாக கைவிடப்பட்ட யுவதியொருவர் தற்கொலைக்கு முயன்று அபாயகரமான நிலையில் யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மண்ணை பிரதிநிதித்துவப்படுத்தும் குறித்த இளம் உறுப்பினர் நீண்டகாலமாக குறித்த பெண்ணை காதலித்து வந்ததாகவும் அத்துடன் கணவன்-மனைவியாக வாழ்ந்து வந்திருந்ததாகவும் தெரியவருகின்றது. முன்னர் தான் பணியாற்றிய அலுவலகத்தில் இருந்து காதலை அவர் தொடர்ந்த போதும் வடமாகாணசபைத் தேர்தலில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் அதிகாரங்கள் இராணுவத்திற்கு தமிழ் மக்கள் மத்தியில் அச்சமான நிலை



### டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களை இராணுவத்துக்கு வழங்கியிருப்பதன் காரணத்தால் தமிழ்மக்கள் மத்தியில் ஒரு விதமான அச்சமும் அதே நேரம் சந்தேகமும் எழுந்துள்ளது. எனவே இந்நிலைமை தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்

(19) ஆம் பக்கம் பார்க்க

## 163 வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் 163 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பின்போது வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 164 வாக்குகளும் எதிராக 1 வாக்கும் செலுத்தப்பட்டன. சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார திட்டத்துக்கு எதிராக வாக்களித்தார்.

கடந்த வாரத்தில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் இடைக்கால வரவுசெலவுத திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த இரண்டு நாட்களாக விவாதங்களும் இடம்பெற்ற நிலையில் நேற்றையதினம் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## உயர்பாதுகாப்பு வலய மீள் குடியமர்வு சிறப்புக்குழு மூலம் தீர்வுகாணப்படும்

### பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, படையினர் நிலை கொண்டுள்ள காணிகளில், இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக குழுவொன்றை அமைத்து, உரிய தீர்வு காணப்படுமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான விஜேவர்த்தன தெரிவித்தார்.

வடக்கில் பாதுகாப்பு நிலைமைகளை கடந்த இரண்டு நாட்களாக ஆராய்ந்த அவர், வவுனியா படைத் தலைமையகத்தில், நேற்று படையினரைச் சந்தித்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசினார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் இனந்தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது. வீட்டில் இருந்த குடும்பஸ்தரை வெளியில் அழைத்த 6 பேர்கொண்ட

(19) ஆம் பக்கம் பார்க்க

புது அம்சங்கள்...
புது மாற்றம்...
புதுப் பொலிவு...
புதுச் சுவை...
புது விலை...
ஐந்தாம் பக்கம்
கல்வி முரசு
வெள்ளிக்கிழமைக் கொசிப்பு
ஊரும் உலகமும்
வெளிவாயன் சொல்லுவது
சிறுவர் முரசு
வியாழன் விநோதம்
பதிவிறக்கப் பெட்டகம்
சேகரம்
சனிக்கிழமை காரம்
நற்சந்தி
பரிசுப் போட்டிகள்
மாண்புமு மாதர்
மருத்துவம்
செவ்வாய் சித்திரம்
இலக்கியம்
விளையாட்டு உலகம்



# சட்டத்துறை மாணவர்களுக்கு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

யாழ்பல்கலைக்கழக கலைப் பீடத்தில் சட்டத்துறைக்குத் தெரிவான புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நாளை திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

2013-2014 கல்வியாண்டுக்குத் தெரிவாகி பதிவுகளை மேற்கொண்ட சட்டத்துறை மாணவர்களை இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி விடுதி வசதி தேவைப்படும் மாண்வர்களுக்கு தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்வி அமைச்சருடன் சந்திப்பு

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பத்தரமுல்லையில் அமைந்துள்ள இசுறுபாயவில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# யாழ்.நகர உணவகங்களில் உடனடியாக விலைக்குறைப்பு

## வணிகர் கழகத்தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தின் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக்குறைப்பை அடுத்து யாழ்.நகரில் உள்ள முதல்தர உணவகங்களின் உணவுப் பொருட்களுக்கான விலைக் குறைப்பு செய்வதற்கு வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைக் குறைப்பு நடைமுறைக்கு வருகின்றது.

புதிய அரசாங்கம் 13 பொருட்களுக்கான விலைகளை குறைந்துள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு யாழ்.நகர வர்த்தகர்களை அழைத்து கலந்துரையாடினோம். இதன்முடிவில் ரீ, தேனீர், வடை, ரொட்டி, இட்லி, தோசை போன்ற உணவுப்பொருட்களுக்கு விலைக்குறைப்புச் செய்ய வர்த்தகர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ரீ 25 ரூபாவாகவும், பிளேன்ரி 15 ரூபாவில் இருந்து 10 ரூபாவாகவும், பால்ரீ 30 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ள அதே வேளை கோதுமை மா ரொட்டி 20 ரூபாவில் இருந்து 15 ரூபாவாகவும், வடை (சிறியது) 20 ரூபாவில் இருந்து 15 ரூபாவாகவும், (பெரியவடை) 30 ரூபாவில் இருந்து 25 ரூபாவாகவும் குறைககப்பட்டுள்ளது.

அத்துடன் இட்லி, தோசை என்பவற்றின் விலையும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இவ்வாறு நகர்ப்பகுதி வர்த்தகர்கள் தமது உணவகங்களின் உணவுப் பொருட்களுக்கு விலைகுறைப்பு செய்துள்ளது போன்று கிராமப்புற உணவகங்களிலும் தமது உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்து விற்பனை செய்ய வேண்டும் என்றும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இவ்விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலை குறையும் என்று எதிர்பார்த்து வர்த்தகர்கள் பொருட்கொள்வனவைக் குறைத்துக் கொண்டிருக்கின்றனர். புதிய விலையில் பொருட்கள் வந்து சேர்ந்ததும் முழுமையான விலையையும் குறைக்க வர்த்தகர்கள் தயாராகவே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (25,பா)

# யாழ்.இந்துக்கல்லூரியில் இரத்ததானம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணி வரை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளையடுத்து யாழ்.இந்துக் கல்லூரியில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே உயிர்காக்கும் உத்தம பணியில் ஈடுபட விரும்புவோர் இன்று யாழ்.இந்துக்கல்லூரிக்கு வருகைதந்து தமது குருதியினை தானமாக வழங்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 332
திகதி - 2015.02.06
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

06 12 20 54 B

பரிசுத் தொகை ரூபா. 22,571,240/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 205 | 205,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 357 | 357,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9107 | 546,420/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4734 | 189,360/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 119562 | 2,391,240/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17411 | 348,220/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 22,571,240/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,487,240/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 22,805,160/-

2015.02.10ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3818)


# கிளி.முறிப்புகுளத்தில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



கிளிநொச்சி முறிப்புக்குள பகுதியில் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது, இச்சடலம் கிளிநொச்சி, கோணாவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மாசிலாமணி சிறிகுமார் எனும், 51 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த சடலம், முறிப்பு குளத்தில் தாண்டிருந்த நிலையில் பிரதேச மக்களால் மீட்கப்பட்டுள்ளது, நேற்று முன்தினம் மாலை 3 மணிமுதல் குறித்த நபரைக் காணவில்லை என உறவினர்கள் தேடியுள்ளனர்.

குறித்த நபர் கொண்டு வந்திருந்த பையை அடையாளம் கண்ட சிலர் குளத்தில், நீராடச் சென்ற வேளை இறந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் தேடியுள்ளனர். தேடுதலின்போது குறித்த சடலம்; காலை மீட்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. (29)

## கிணற்றில் வீழ்ந்து சீமான் உயிரிழப்பு

வீட்டு கிணற்றில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் நடைபெற்றது.

இதில் சீமான் (வயது - 47) என்பவரே உயிரிழந்தார். இவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# 50 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

ஒரு கிலோ நெல்லுக்கு 50 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அறுவடை ஆரம்பித்துள்ள இந்த வேளையில் தனியார் வியாபாரிகள் நெல்லை கிலோ 25, 30 ரூபாவுக்கே கொள்வனவு செய்கின்றார்கள். இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது பற்றி வடபகுதி விவசாயிகள் மேலும் தெரிவித்திருப்பதாவது,


ஒரு மூடைக்கு 70 கிலோ என்ற ரீதியிலேயே வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். கூடிய அளவு நெல்லைக் கொடுத்த போதிலும் நிர்ணய விலையின் அரைவாசி அல்லது அதற்கு சற்று அதிகமான விலைக்கே அவர்கள் கொள்வனவு செய்கின்றார்கள்.

உள்ளீடுகளான விதைநெல், பசளை, மருந்து என்பவற்றை விவசாயிகள், கூடிய் விலைக்கே கொள்வனவு செய்து, விவசாயம் செய்தார்கள். இதனால் கையும் கணக்கும் சரி என்ற வகையிலேயே ஒரு கிலோ 50 ரூபா என்ற நெல்லின் விலை நிர்ணயம் அமைந்திருக்கின்றது. இந்த நிலையில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க குறைந்த விலைக்கு வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவு செய்வதால் நாங்கள் பெரும் நட்டத்திற்கு ஆளாக நேரிட்டுள்ளது.

எனவே, நெற் சந்தைப்படுத்தும் சபை மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பன அறுவடை ஆரம்பமாகியதும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு முன்வர வேண்டும். நெல் அறுவடை ஆரம்பமாகி, பெரிய அளவில் நெல்வரத் தொடங்கிய பின்பே இந்த நிறுவனங்கள் கொள்வனவு செய்வது வழமையாக இருந்து வருகின்றது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

அரை விலைக்கும் கால் விலைக்கும் விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்கின்ற தனியார் வர்த்தகர்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவும்; அநியாயமாக நட்டமடைவதிலிருந்து, விவசாயிகளைக் காப்பாற்றவும் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேள்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பிரமாண்டமாக புனரமைக்கப்படும் பெருங்குளம் முத்துமாரி அம்மன்ஆலயம்



(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் பிரசித்தி பெற்ற வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் மிகப் பிரமாண்டமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டின் பல பகுதிகளிலும் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வசித்து வருகின்ற, முத்துமாரி அம்மன் பக்தர்களின் நிதி உதவியுடன் பல கோடி ரூபா மதிப்பிடப்பட்ட இப்புனரமைப்புப் பணிகள் தற்போது வேகமாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்து ஆலயங்களை தரிசிக்க நவாலியிலிருந்து 24 பேர் பயணம்

(யாழ்ப்பாணம்)

நவாலி ஸ்ரீ கதிர்காம கந்தன் ஆலய முருகன் அடியார்கள் 24 பேர் இன்று இந்து ஆலயங்களை தரிப்பதற்காக இந்தியா பயணமாகின்றனர்.

நவாலி ஸ்ரீ கதிர்காம கந்தன் ஆலய பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதன் தலைமையில் இக்குழுவினர் இந்தியா புறப்படுகின்றனர். இந்தியாவில் 21 நாட்கள் தங்கியிருக்கும் இந்த முருகன் அடியார்கள் இந்தியாவில் உள்ள 14 முக்கிய ஸ்தலங்களை தரிசிப்பதுடன் விசேட பஜனை வழிபாடுகளிலும் பங்கெடுப்பர் என தெரியவருகிறது.

இதேவேளை கேரளா, ஆந்திரா மாநிலங்களில் உள்ள இந்து ஆலயங்களைத் தரிசிப்பதற்கும், புட்டர்பத்தியில் உள்ள சாய்பாபா சாந்தி நிலையத்திற்கும் தாம் செல்லவுள்ளதாக ஆலய பிரதமகுரு தெரிவித்துள்ளார். (92)

# நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

(யாழ்ப்பாணம்)


வேலணை. பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்களில் உள்ள நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் செயற்பாடு நாளை திங்கட்கிழமை முதல் நான்கு நாட்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி நயினாதீவில் நாளை திங்கட்கிழமையும், புங்குடுதீவில் நாளை மறுதினமும், 12, 13 ஆம் திகதிகளில் வேலணையிலும் நடைபெறவுள்ளன.

எனவே இப்பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# காப்பெற் வீதியாக மாற்றப்படும் தீவகத்தின் பிரதான வீதி



யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை வரை நீண்டு செல்லும் தீவக பிரதான வீதியினை அகலப்படுத்தி காப்பெற் வீதியாக மாற்றும் பணிகள் தற்போது மெதுவாக ஆனால் மிகப் பெருமெடுப்பில் நடைபெற்று வருகின்றன.

அதி உயர் தொழில்நுட்பத்துடன் கனரக இயந்திரங்களின் துணையுடன் இவ்வீதியின் அகலிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் இவ்வீதியின் அகலிப்புப் பணிகள் நிறைவடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் முழுமையாக பணிகள் நிறைவடைய நீண்டகாலம் செல்லலாம் என தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறைவரை அமைக்கப்படும் இக்காப்பெற் வீதியின் பணிகள் முழுமையாக நிறைவடைந்ததும் யாழ்.பண்ணையிலிருந்து அல்லைப்பிட்டி சந்தி வரை உள்ள தூரத்தை 8 நிமிடங்களில் கடந்து விடமுடியும் என்று அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றின் விளம்பரம் தெரிவிக்கின்றது.

# சிறந்த ஆட்டுப்பண்ணையாளராக வல்வெட்டித்துறை இராகுலன் தெரிவு





கடந்தமாதம் 25ஆம் திகதி வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் வவுனியா மாவட்டத்தின் சிறந்த ஆட்டுப் பண்ணையாளராக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞரான இராகுலன் பாலசிங்கம் தெரிவானதுடன், இளம் முயற்சியாளர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவர் போரின் பின் வண்ணியில் உள்ள மக்கள் தொழில் வாய்ப்புகளுக்காக சிரமப்படும் நிலையில் அங்குள்ள மக்களுக்கு தொழில்வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நெடுங்கேணியில் ஆராத்யா விவசாய வர்த்தக தனியார் நிறுவனத்தை ஆரம்பித்து அங்கு சிறந்த முறையில் ஆடுகளை வளர்த்து வருகின்றார்.

அங்கு ஆடுகள் மட்டுமல்லாது கோழி வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள இராகுலன் அடுத்த மாதம் முதல் மாடு வளர்ப்பினையும் மேற்கொண்டு பாற்பண்ணையை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆடுகளுக்குத் தேவையான புற்களை இவர் பண்ணையுடன் சேர்த்தே வளர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி சபைகளுக்கு வாகனங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளின் பயன்பாடுகள், தேவைகளுக்கு ஏற்ப பல மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்க்ள் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் தேவைகள் கருதி அப்பிரதேசத்தின் வளப்பயன்பாட்டினை முன்னெடுக்கு முகமாகறோலர், பக்ஹோ, ட்ரக, வெள்ளிரும்பு பவுசர், பிக்கப் மற்றும் பல உபயோகமுள்ள சீனா தயாரிப்பு வாகனங்கள் தவிசாளர்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளன. வடக்கில் சில உள்ளூராட்சி சபைகளுக்கு இரண்டு வாகனங் களும், வேறு சில உள்ளூராட்சி சபைகளுககு பெறுமதி வாய்ந்த ஒரு வாகனமும் பத்திரமுல்லையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஏனைய பகுதிகளுக்கும் வாகனங்களை வழங்குவதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.

- டெஸ்கார்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழரின் சுதந்திரம் எப்போ?

நாடாளுமன்ற விளையாட்டுத்திடலில் நடைபெற்ற 67ஆவது சுதந்திர தின விழாவில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக்கட்சியின் சார்பில் இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றதையடுத்து கூட்டமைப்புக்குள் மீண்டும் கொந்தளிப்புகள் வெடித்திருக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் கரங்கோர்த்து நாட்டின் தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்ததற்காகவும் இரா.சம்பந்தன் அவர்கள் பலத்த கண்டனங்களுக்குள்ளாகியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி என்று வந்தவுடன் தமிழரசுத் தலைவர்களுக்கு ஐக்கிய குலாவல் உணர்வுத் தடுமாற்றங்கள் வந்துவிடுவதும், மற்றைய சிங்களக் கட்சிகளை நினைத்தால்தான் தமிழ் இனவாத உணர்வு பெருகி, சிங்கள தேசம் வேறு தமிழர் தேசம் வேறு என்று தமிழ் மக்களுக்கு உணர்ச்சியேற்றும் நாடகங்கள் போடுவதும் இவர்களது வழமை.

ஐக்கிய இறைமையுள்ள ஒற்றையாட்சி நாட்டுக்கான சத்தியப் பிரமாணங்களை சிங்களத் தலைவர்கள் முன் வாசித்து பாராளுமன்றப் பதவிகளையும் மாகாணசபைப் பதவிகளையும் எடுத்து, இலங்கை அரசு தரும் ராஜதந்திரக் கடவுச்சீட்டுகளுக்கு முண்டியடிக்கும் போதெல்லாம் அதிலுள்ள கொடிகள் சின்னங்கள் இவர்களுக்கு உறுத்துவதில்லை.

தேசியக் கொடிகள், சின்னங்களுடன்தான் பாராளுமன்ற மாகாணசபை வாகனங்கள் தரப்படுமென்றால், அதையும் கடிதம் எழுதிக் கேட்டு வாங்கிக்கொண்டு ஓடித்திரிவதில் இவர்களுக்கு எந்தத் தமிழ்த்தேசிய ரோசமும் வந்து தடுக்கப்போவதில்லை.

இனவாத ஆவேசத்தையூட்டிப் பெறும் தேர்தல் வெற்றிகளுக்காக சிங்களக் கொடி, சிங்களச் சுதந்திரம் என்றெல்லாம் பேச்சளவில் விரோதத்தைக் கக்கிவிடும் தலைவர்கள், தாங்கள் ரகசியமாகவோ அல்லது தவிர்க்க முடியாமலோ சிங்களத் தலைவர்களுடன் கொடியேற்றும்போது, கிரிக்கெட் விளையாடும்போது, சுதந்திரம் கொண்டாடும்போது அந்த எதிர்ப்பும் வெறுப்பும் பூமறாங் ஆக அவர்களுக்கே திரும்புகின்றன.

தங்கள் பதவிகளுக்காக என்றால் இவர்கள் ஏற்றுக்கொண்டுவிடுவதும் தேர்தல் அரசியல் தேவைகளுக்காக என்றால் வாயால் வெட்டிவிழுத்துவதுமான இந்த கொடி, சின்னம், சுதந்திரதின விவகாரம் எல்லாம் தமிழ் மக்களுக்கு மறைமுகமாக தனிநாட்டு நப்பாசையை ஒரு மூலையில் விட்டுவைப்பதன் மூலம் தேர்தல்களை வெல்லும் உத்தியே.

அது நமது கொடியல்ல, அது நமது சுதந்திர தினமல்ல என்று இப்போதும் சும்மா பேச்சளவில் சொல்லிக் கொண்டிருப்பது, தனிநாட்டுக் கனவைப் பூர்த்தி செய்யவே நாங்கள் முனைகிறோம் என்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதற்காகவே.

தனிநாடெல்லாம் சாத்தியமில்லை என்பது இந்தத் தமிழரசுத் தலைவர்களுக்கு நன்கு தெரியும். இன்னும் அந்தத் தீவிரவாதக் கனவைச் சொல்லி மக்களை உசுப்பேற்றிக் கொண்டிருந்தால்தான், நடைமுறைச் சாத்தியமான விடயங்களைப் புரிந்து நமது அரசியலுரிமைகளைப் பெறமுனையும் ஏனைய கட்சிகளைத் தோற்கடித்துத் தேர்தல் பதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கலாம் என்று தெரிந்தே வெட்டி வீராவேசம் பேசுகிறார்கள்.

நடைபெற முடியாத இந்தத் தனிநாட்டுக் கனவுப் பேச்சுக்களை விதைத்து அரசியல் செய்துகொண்டிருப்பதால்தான், இவர்களால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை வெளிப்படையாக வைத்து யாருடனும் பேசமுடியாமல் இருக்கிறது.

மக்களைத் தொடர்ந்தும் தனிநாட்டுக் கனவுக்கு உசுப்பேற்றி வைத்துக்கொண்டு, பிறகு அதற்குக் குறைவான எந்தத் தீர்வைத்தான் இவர்களால் ஒன்றுபட்ட குரலில் வெளியே சொல்ல முடியும்?

- ஆசிரியர்

# பள்ளி மாணவன் செலுத்திய பயணிகள் பேருந்து வண்டி

## 40 பயணிகள் அருந்தப்பு

முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடுவாய் - மதுரங்குளி பிரதான வீதியில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் தனியார் பயணிகள் பேருந்தைச் செலுத்திச் சென்ற 17 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரை கைது செய்துள்ளதோடு குறித்த பேருந்தையும் தமது பொறுப்பில் எடுத்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடுவாயிலிருந்து புத்தளம் நோக்கி குறித்த பேருந்து 40 பயணிகளுடன் பயணித்துக் கொணடிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பயணிகள் போக்குவரத்திற்கான வடமேல் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் மூலம் அனுமதிப்பத்திரத்தை கைப்பற்றப்பட்டுள்ள பயணிகள் பேருந்துக்கு அதன் சாரதி இல்லாத சமயங்களில் கைது செய்யப்பட்டுள்ள சிறுவனே சாரதியாகப் பணியாற்றுவதாக பயணிகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் லலித் சந்தசிறியின் உத்தரவின் பேரில் போக்குவரத்துப் பிரிவினர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கே.பி.யை ஏன் கைதுசெய்ய வேண்டும்

# விளக்கம் சொல்கிறது ஜே.வி.பி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த, கே.பி ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய நபர் என கூறியிருக்கின்றார். இதன் பின்னணியில் பல மர்மங்கள் உள்ளதாக மக்களும் நாங்களும் கருதுகிறோம் என ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் கே.பி யிடம் இருந்த சொத்துக்கள், பணம், கப்பல்கள் போன்றவற்றுக்கு என்ன நடந்தது? போன்ற பல கேள்விகள் இந்த நாட்டு மக்களிடமும் விசேடமாக தமிழ் மக்களிடமும் உள்ளது.

அதற்காகவே கே.பி. கைது செய்யப்பட வேண்டும். என்னும் நிலைப்பாட்டினை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) எடுததிருக்கின்றது. அதற்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த சந் திரசேகரிடம் விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாகவிருந்த கே.பி. (குமரன் பத்மநாதன்) கைது செய்யபபட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை ஜே.வி.பி எடுத்தமைக்கான காரணமென்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் உயர நீதிமன்றில் அந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கின்றார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதன் பின்னர் தானே தலைவர் என கே.பி அறிவித்திருந்தார்.

அவர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் விமான நிலையத்திலிருந்து கொழும்பு வரும்போது அஞ்சிக்கொண்டே வந்தேன்.

ஆனால் பின்னர் கோத்தாபய ராஜபக்ஷவை 10 நிமிடங்குள் சந்தித்துப் பேசியதன் பின்னர் நான் கூல்டவுண் ஆகிவிட்டேன் எனக் கூறியிருக்கின்றார்.

எனவே கே.பி.வசமிருந்த சொத்துக்கள், கப்பல்கள், பணம் ஆகியனவற்றுக்கு என்ன நடந்தது? என்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு எழுந்துள்ளது. என்றார். (25)

## ஜோன் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

## 115 உறுப்பினர்கள் ஆதரவு

அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் நிமித்தம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருப்பதாக, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

வத்தளைப் பிரதேச சபையின் தலைவர் உட்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் நால்வர் மீது மேற்கொண்ட தாக்குதல் தொடர்பிலேயே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. (ரி)

## மயிரிழையில் தப்பினார் பிரித்தானியப்பிரஜை

உப்புவெளி - எல்சவத்த பிரதேசத்தில் கடலில் குளிக்கச் சென்ற வெளிநாட்டு பிரஜை ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அங்கிருந்த பொலிஸ் உயிர் பாதுகாப்பு அதிகாரிகளால் அவர் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த 58 வயதான ஒருவரே இவ்வாறு விபத்துக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் மேலதிக இணைப்பாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சகல பிரதேச சபை, நகரசபை மற்றும் திணைகளங்களில் கடமையாற்றும் உறுப்பினர்கள் அனைவ்ரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (140)

# தனியார்துறையிலும் சம்பள உயர்வு இல்லையேல் வெடிக்கும் போராட்டம்

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என ஜே.வி.பி அறிவித்துள்ளது.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் பரிந்துரை செய்யததற்கு அமைய தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்கள் 2500 ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் மாகாணசபை உறுப்பினர் கே.டி. லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிற்கு நிகராக தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வினை சட்டமாக்குமாறு நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு 36ஆம் இலக்க திருத்தச் சட்டத்திற்கு அமைய தனியார்துறை ஊழியர்களுக்கு 1000 ரூபா கொடுப்பனவு உயர்த்தப்பட்டது.

இதில் திருத்தங்களைச் செய்து 2500 ரூபா சம்பளத்தை தனியார்துறை ஊழியர்களுக்கு உயர்த்த முடியும் என லால்காந்த தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு தொடர்பில் நிதி அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டங்களை முன்னெடுத்தேனும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களை ஏமாற்றுவது தான் தமிழ்த் தலைமையின் வரலாறு


**ஒவ்வொரு கட்டத்திலும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகக் கடுமையாக முயற்சிப்பது போன்ற பொய்த் தோற்றத்தைத் தமிழ் மக்களுக்குக் காட்டிகொண்டு அரசியல் தீர்வுக்குக் குந்தகமாகச் செயற்படுவதுவதான் தமிழரசுக் கட்சியின் வரலாறு.**

ஜனநாயக விழுமியத்தை அடைவதற்காகப் போராடுகின்ற போதிலும் அதை அடைய முடியவில்லை என்றும் மக்கள் தான் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் சொல்கிறார் மாவை சேனாதிராசா. நெல்லியடி மரக்கறி சந்தை திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றியபோதே இவ்வாறு அவர் கூறினார்.

சேனாதிராசா தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர். வாலிபப் பருவத்திலிருந்தே தமிழரசுக் கட்சியின் போராட்டங்களில் பங்குபற்றிய அனுபவம் உள்ளவர். எனவே, ஜனநாயக விழுமியத்துக்கான போராட்டம் என்று இவர் கூறுவதைத் தமிழரசுக் கட்சியின் போராட்டம் எனக் கருதலாம். தமிழ் அரசியல் அரங்கிற்குத் தமிழரசுக் கட்சி வந்த 1952ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழரசுக் கட்சியின் போராட்டங்களால் எதையும் அடையமுடியவில்லை என்பதே மாவை கூறியதன் அர்த்தம். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்படுகின்றபோதிலும் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கமே அங்கு நிலவுகின்றது.

தமிழரசுக் கட்சியின் போராட்ட வரலாறு அறுபது வருடங்களுக்கு மேற்பட்டது. இந்த நீண்ட காலப் போராட்டத்தின் மூலம் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இனப்பிரச்சினையை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இப்பிரச்சினையின் தீர்வுக்காகத் தமிழரசுக் கட்சி உருப்படியாக எதையும் செய்யவில்லை. பண்டா-செல்வா ஒப்பந்தம், கச்சேரியடிச் சத்தியாக்கிரகம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகிய மூன்றும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகத் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் என்று சிலவேளை கூறலாம். இனப்பிரச்சினையின் தீர்வில் உண்மையான கருத்தீடுபாட்டுடன் தமிழரசுக் கட்சி இவற்றைச் செய்ததா அல்லது ஏதாவது செய்வதற்காகத் தமிழ் மக்களுக்குக் காட்டுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினை பெருமளவில் தீர்ந்திருக்கும் என்று அண்மையில் கூடச் சம்பந்தன் கூறியிருக்கின்றார். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தமிழரசுக் கட்சி செயற்படவில்லை என்றே தோன்றுகின்றது. பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் அக்கட்சியினால் தூண்டிவிடப்பட்ட பௌத்த மதகுருமாரும் அரசாங்கத்தின் வலதுசாரி அமைச்சர்களும் எதிர்த்தார்கள். எதிர்ப்பு வலுவடைந்த நிலையிலும் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டிலேயே இருந்தார். பிரதமரைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் வலதுசாரி அமைச்சர்கள் கூடிப் பேசி சிங்கள சிறீ பஸ்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பினார்கள். இது ஒப்பந்தத்தைத் தோற்கடிக்கும் முயற்சி என்பதையும் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் இந்தப் பிரச்சினை தானாக மறைந்துவிடும் என்பதையும் தமிழரசுக் கட்சி புரிந்து கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவர்கள் பஸ்களின் சிங்கள சிறீ இலக்கத் தகடுகளுக்குத் தார்பூசி அழிக்கும் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் நேரடியாக இப்போராட்டத்தில் பங்குபற்றினார். ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டவரோ தென்னிலங்கையின் எதிர்ப்பு அலைக்குக் கைகொடுக்கும் வகையில் சிறீ அழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பிரதமரின் நிலை மிகவும் பலவீனமாகியது. ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. சிறீ எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டால் இந்த நிலை ஏற்படும் என்பதைத் தெரிந்து கொண்டுதான் தமிழரசுக் கட்சி அதைச் செய்தது.



■ சங்கர சிவன்

**காலவரையறைக்குள் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் சாத்வீகப் போராட்டம் என்று ஒரு நாள் கூறும் மாவை காலவரையறைக்குள் பிரச்சினை தீராவிட்டால் சர்வதேசத்தை நாடிச் செல்லப்போவதாக மறுநாள் சொல்கிறார். இரண்டுமே தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் கதைகள்.**

இனப்பிரச்சினையின் தீர்வுககாக முயற்சிப்பதாகக் காட்டிக் கொண்டு தீர்வைத் தவிர்க்கும் அரசியல் இது.

சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து நடாத்திய கச்சேரியடிச் சத்தியாக்கிரகத்தின்போது தமிழ் நாட்டுத் தபால் சேவையை ஆரம்பித்ததோடு தமிழ்நாட்டுக் காணிக் கச்சேரியும் நடாத்திக் காணி விநியோகமும் செய்தார்கள். சமஷ்டிக் கோரிக்கையின் உண்மையான நோக்கம் தனிநாடு தான் என்ற அபிப்பிராயம் இந்தச் செயற்பாடுகளால் தென்னிலங்கையில் உருவாகும் என்பதும் அது இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக இருக்கும் என்பதும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல. தெரிந்து கொண்டே அவற்றைச் செய்தார்கள். ஒருபுறத்தில் தீர்வுக்குச் சாதகமற்ற நிலையைத் திட்டமிட்டு உருவாக்கினார்கள். மறுபுறத்தில் தமிழ் மக்களை உணர்ச்சிவசப்படுத்தித் தங்களுக்கான ஆதரவை நிரந்தரமாகத் தக்கவைத்தார்கள்.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் பிரதான அம்சம் மாவட்ட சபை. அந்த எதிர்ப்புடனேயே தமிழரசுக் கட்சி டட்லி சேனநாயக்கவின் தலைமையிலானஅரசாங்கத்தில் பங்காளி ஆகியது. சிறிது காலத்தின் பின் டட்லி சேனநாயக்க தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து மாவட்ட சபை வழங்குவது சாத்தியமில்லை எனக் கூறினார். அதற்குப் பின்னரும் தமிழரசுக் கட்சி அந்த அரசாங்கத்தில் பங்காளியாக இருந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழரசுக் கட்சியின் நிகழ்ச்சி நிரலில் இல்லை என்பதே இதன் அர்த்தம்.

1970 பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டையில் அமிர்தலிங்கம் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளரிடம் தோற்றார். உடுப்பிட்டியில் சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சி வேட்பாளரிடம் தோற்றார். இந்தத் தோல்விகள் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றத்துக்கு வழிவகுத்தன. தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி கடுமையாக விமர்சித்து வந்ததால் ஒரு சமரசம் ஏற்பாடாகத் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இதிலும் தமிழரசுக் கட்சியின் கையே மேலோங்கியிருந்தது. தனிநாட்டுக் கோரிக்கையை இவர்கள் கருத்தீடுபாட்டுடன் முன்வைக்கவில்லை. தனிநாடு சாத்தியமற்றது என்பது தெரிந்திருந்தும் தமிழ் மக்களை உணர்ச்சிவசப்படுத்தித் தேர்தலில் இலகுவாக வெல்வதற்காகவே அக்கோரிக்கையை முன்வைத்தார்கள். அதனால்தான் ஜே.ஆரின் மாவட்ட சபைகளை ஏற்று அதற்கான தேர்தலில் போட்டியிட்டார்கள். தனிநாட்டுக் கோரிக்கை நடைமுறைச் சாத்தியமற்றது என்பது மாத்திரமின்றி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வெகுவாகச் சிக்கலாக்கும் என்பதும் விளங்காத அளவுக்குத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் முட்டாள்களல்ல. தங்கள் நாடாளுமன்றப் பதவிகள்தான் முக்கியமானவை என்ற சுயநல சிந்தனையுடனேயே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார்கள். அரசியல் தீர்வுக்கு என்ன நடந்தாலும் அதைப் பற்றி இவர்களுக்குக் கவலை இல்லை.

ஒவ்வொரு கட்டத்திலும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகக் கடுமையாக முயற்சிப்பது போன்ற பொய்த் தோற்றத்தைத் தமிழ் மக்களுக்குக் காட்டிக்கொண்டு அரசியல் தீர்வுக்குக் குந்தகமாகச் செயற்படுவதுதான் தமிழரசுக் கட்சியின் வரலாறு. தமிழரசுக் கட்சியாகவும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் வெவ்வேறு பெயர்களில் செயற்பட்டபோதிலும் தீர்மானம் மேற்கொள்ளும் சக்தியாகத் தமிழரசுக் கட்சியே இருந்து வந்தது. இப்போதும் அதுதான் நிலை. அன்று முதல் இன்று வரை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றித் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொண்டு வருகின்றார்கள்.

கூட்டமைப்பாகச் செயற்படத் தொடங்கிய பின்னரும் மக்களை ஏமாற்றும் காரியத்தைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கச்சிதமாகச் செய்து வருகின்றார்கள். முதலில் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கானல் நீரைக் காட்டினார்கள். சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் எந்த நேரமும் வந்து குதிக்கத் தயாராக இருக்கின்றது என்ற பாணியில் சம்பந்தனும் சேனாதிராசாவும் பல கூட்டங்களில் பேசினார்கள். அது வெறும் புஸ்வாணம் என்பது மக்களுக்குத் தெளிவாகியதும் ஜெனீவா மகாநாட்டின் மூலம் தீர்வு என்று கதை அளந்தார்கள். அதுவும் சாத்தியமில்லை என்பது தெரிந்தவுடன் சாத்வீகப் போராட்டம் நடாத்தப்போகின்றாராம் மாவை.

கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்படுவது தான் போராட்டம். தமிழரசுக் கட்சித் தலைவர்களான சம்பந்தனும் மாவையும் நடாத்தும் போராட்டத்துக்குக் கோரிக்கைகள் இல்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய காலங்களில்கூட இவர்களிடம் கொள்கை இல்லை. சர்வதேச சமூகம் எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இருக்கவில்லை. இப்போது சாத்வீகப் போராட்டம் பற்றிப் பேசும் போதும் இவர்களிடம் கொள்கை இல்லை. அரசாங்கம் தீர்வை முன்வைக்காவிட்டால் போராட்டமாம். அதாவது இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் தலைவர்களிடம் தீர்வு இல்லை. அரசாங்கத்திடம் கையை நீட்டுகின்றார்கள். இது என்ன கையாலாகாத்தனம்?

முன்னைய தமிழரசுக் கட்சித் தலைவர்கள் செய்த ஏமாற்றிலும் பார்க்க இது பெரிய ஏமாற்று. முன்னைய தலைவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அக்கறையுடன் செயற்படாதபோதிலும் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொரு கோரிக்கையை முன்வைத்து மக்களை ஏமாற்றினார்கள். இன்றைய தலைவர்கள் கோரிக்கையே இல்லாது மக்களை ஏமாற்றுகின்றார்கள். மக்களை ஏமாற்றுவதில் கூட நேரத்துக்கொரு நிலைப்பாடு.

காலவரையறைக்குள் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் சாத்வீகப் போராட்டம் என்று ஒரு நாள் கூறும் மாவை காலவரையறைக்குள் பிரச்சினை தீராவிட்டால் சர்வதேசத்தை நாடிச் செல்லப்போவதாக மறுநாள் சொல்கிறார். இரண்டுமே தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் கதைகள்.

இவர்களின் காலவரையறை எது? இவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்ன? அரசாங்கம் எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அதை ஏற்றுக் கொள்வார்களா? அப்படி ஏற்றுக் கொள்வதற்கு ஒரு தலைமை தேவைதானா?

இப்படியே இவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இவர்களிடம் ஒரு கொள்கையும் இல்லை. எனவே, மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். சரியான அரசியல் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ◆

# துறைமுக நகர உருவாக்கம் கடும் அதிருப்தியில் டில்லி

தி இந்து

கொழும்பு துறைமுக நகரம் உருவாக்கும் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பால் இந்திய வட்டாரங்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது கொழும்பு துறைமுக நகர திட்டத்தை செயற்படுத்த இலங்கை, சீனா இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. சீன அதிபர் ஜி ஜின்பிங் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

கடந்த ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனா, அவரது அணியைச் சேர்ந்த ரணில் விக்ரமசிங்க ஆகியோர் கொழும்பு துறைமுக நகர திட்டத்தை கடுமையாக விமர்சித்தனர். புதிய அரசு பதவியேற்றவுடன், இத்திட்டம் மறுஆய்வு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி சிறிசேனா தலைமையில் அண்மையில் நடை பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், கொழும்பு நகர துறைமுக திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்த சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமைச்சரவை செய்தித் தொடரபாளரும் சுகாதாரத்துறை அமைச்சருமான ரஜிதா சேனாரத்னா நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

கடலில் மணல் நிரப்பி நிர்மாணிக்கப்படும் கொழும்பு துறைமுக நகர பணிகளால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆய்வு முடிவுகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே துறைமுக நகர திட்டத்தை தொடர சீன நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகள் களையப்படும். இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனா அடுத்த மாதம் சீனா செல்கிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வந்தநிலையில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இலங்கையின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படும் என்று இந்திய தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் திடீர் திருப்பமாக கொழும்பு துறைமுக நகர திட்டத்தை செயற்படுத்த சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது இந்திய வட்டாரத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என த ஹிந்து மேலும் தெரிவித்துள்ளது.

## வெலிக்கடை மோதல் விசாரணை மீண்டும்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012 ஆம் ஆண்டு நிகழ்ந்த மோதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த, நியமிக்கப்பட்டுள்ள மூவர் அடங்கிய குழு நேற்று சம்பவம் நடந்த இடத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.


இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி விமல் நம்புவசம் நியமிக்கப்பட்டுள்ளதோடு ஓய்வு பெற்ற சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக விஜயதிலக்க மற்றும் ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி எஸ்.கே. லியனகே ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் வெலிக்கடை சிறை வளாகத்தில் பரிசோதனைகளை நடத்திய போது, சிறைச்சாலை ஆணையாளர் ஜெனரல் சந்தரரத்ன பல்லேகம உடன் இருந்தார்.

2012. ஆம் ஆண்டு நம்பவர் மாதம் 9ஆம் திகதி. நடந்த வெலிக்கடை மோதல் சம்பவத்தில் சுமார் 27 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மேலும் பல காவலர்கள் மற்றும் அதிரடிப் படையினர் இந்த மோதலில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் படகுகளை விடுவிக்க இணக்கம்



இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க ஜனாதிபதி மைத்திரிபால தீர்மானித்திருக்கிறார் என மீனவர் கூட்டமைப்பை ஆதாரமாகக் கொண்டு இந்திய நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு தடுத்து வைககப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களின் 86 படகுகளை விடுவிக்க புதிய அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான மீனவர்கள கட்டம் கட்டமாக விடுவிக்கப் பட்டனர்.

ஆனால் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படவில்லை. காரைநகர், காங்கேசன்துறை, தலைமன்னார், திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தப் படகுகளை விடுவிக்குமாறு இந்திய மீனவர்கள், மத்திய, மாநில அரசுகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும், அவை விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது - என்று தெரிவிக்கப்பட்டது.

## ஜனநாயக சமூக உருவாக்கத்துக்கு அமெரிக்கா பக்கபலமாக இருக்கும்



இலங்கையில் வெளிப்படைத் தன்மை மிக்க அமெரிக்க ஜனநாய சமூகத்தை ஏற்படுத்த உதவும் என அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கான ஆலோசகர் சூசன் ரைஸ் இதனை தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதிபராக் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு கொள்கை குறித்த தனது உரையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாற்றத்தை சந்தித்திருக்கும் இலங்கை, மியன்மார், துனீசியா போன்ற நாடுகளுக்கு நாங்கள் உதவுவோம் என அவர் கூறினார்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதி பேச்சாளர் மேரி ஹர்வ் நல்லிணக்கம் மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையின் புதிய அரசாங்கம் எடுத்துள்ள ஆரம்ப கட்ட முயற்சிகளைப் பாராட்டினார்.

நண்டகால விடயங்கள், உரிமைகள், நல்லாட்சி, ஜனநாயகம், பொறுப்புக்கூறுதல் போன்ற விடயங்களுக்கு தீர்வைக்காண மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாங்கள் வரவேற்கின்றோம். நிச்சயமாக சில சாதகமான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுளளன என அவர் தெரிவித்தார்.

## வற்வரி மோசடி இருவர் கைது



இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய வற் ஊழல் மோசடியில் (300 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை) சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகள் இருவரை மலேசியாவில் வைத்து, அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்களையடுத்தே இவர்கள் அங்கு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொஹம்மட் முர்சி ரசீட் மற்றும் மொஹம்மட் நஸ்மி நாகூர் அடிமை ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், இம்மோசடியின் பிரதான சூத்திரதாரியான, தற்போது டுபாயில் வசிக்கும் கார்மின குதுப்தீனைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டிருக்கும் குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வரும் நோக்கில் பொலிஸ் குழுவொன்று நேற்று மலேசியா பயணமாகியுள்ளது.

## ஜனாதிபதியுடன் பிள்ளையான் பேச்சு கிழக்கு நிலைவரம் அலசல்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு - விஜயராம வாசஸ் தலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு இடம்பெற்றதாக அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி என்றழைக்கப்படும் புஸ்பகுமார் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, கிழக்கு மாகாணசபை ஆட்சி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் தற்கால, எதிர்காலங்களில் அரசியல் முன்னெடுப்புக்கள் மற்றும் கிழக்கு மாகாணசபை விடயத்தில் கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன், பிரதித்தலைவர் யோகவேள், செயலாளர் பூ.பிரசாந்தன், கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் அஸாத் மௌலானா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் புஸ்பகுமார் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது

## மீண்டும் பாஸ்கரலிங்கம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் ஆலோசகராக ஆர்.பாஸ்கரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச நிர்வாக சேவையில் 34 வருட அனுபவம் கொண்ட இவர், வீடமைப்பு, போக்குவரத்து, மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளராகவும் ஏலவே கடமையாற்றியவர்.

## இலங்கையின் முடிவை வரவேற்கிறது சீனா

கொழும்பு போர்ட் சிட்டி திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் முடிவை சீனா வரவேற்றுள்ளது.

அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹொங் லெய் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசியாவில் சீனாவின் கடல்சார் புதிய பட்டுப்பாதை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை முக்கிய சகாவாக விளங்குகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

# அச்சங்குளம் கிராமப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுக்குமாறு மக்கள் கோரிக்கை



(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் இதனால் இப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அச்சங்குளம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

வனவள இலாகா திணைக்களத்திற்குச் சொந்தமான குறித்த காணியிலேயே குறித்த மணல் அகழ்வு இடம் பெற்றுவருகின்றது. மணல் அகழ்விற்கான அனுமதியை வனவள இலாகா மற்றும் நில புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் வழங்கியுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதியில் உள்ள ஆற்றுவாய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீதியும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த காட்டுப் பகுதி வீதியூடாக மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆறு பெருக்கெடுக்கும் பட்சத்தில் அச்சங்குளம் கிராமம் ஆற்று நீரில் மூழ்கும் சந்தர்ப்பம் உள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மணல் அகழ்வின் காரணமாக காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மீண்டும் எதிர்வரும் வருடம் மல்வத்து ஓயா பெருக்கெடுத்தால் அச்சங்குளம் கிராமம் முற்று முழுதாக நீரில் மூழ்கும் நிலை ஏற்படும். படையினரும் மணல் அகழ்பவர்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் நானாட்டான் பிரதேச செயலகம், நானாட்டான் பிரதேச சபை அதிகாரிகள் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் கற்றல் ஊக்குவிப்புக்கள் "நாம் நண்பர்கள்" அமைப்பினூடாகவும் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினூடாகவும் அண்மையில் இளவாலை முள்ளானை பகுதிக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முள்ளானை எழுச்சியக மண்டபத்தில் முள்ளானை இளைஞர் கழக தலைவர் சில்வெஸ்ரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (48)

# பரப்புக்கடந்தானில் காடுகள் அழிக்கப்படுவதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்தினை அண்டிய பிரதேசத்தில் பாரிய அளவில் காடுகள் அழிக்கப்படுவதாகவும் இதனை உடன் தடுத்து நிறுத்துமாறும் வட்மாகாண மீன்பிடி போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பரப்புக்கடந்தானில் பாரியளவில் காடுகள் அழிக்கப்படுவதாக அப்பகுதி மக்களால மாகாண அமைச்சருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அந்த இடத்துக்குச் சென்ற அமைச்சர் அங்கு பாரியளவில் காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளதைப் பார்த்ததுடன் காடுகள் அழிக்கப்படுவதை உடன் நிறுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி வனவள திணைக்களத்துக்குச் சொந்தமான நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு பாரிய அழிவு நடந்திருக்கும் போது வனவள திணைக்ள அதிகாரிகள் ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர் என கேள்வி எழுப்பியதுடன், இவ்விடயம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் போது பல உண்மைகள் வெளிப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்த காடழிப்பு தொடர்பாக உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு எதிராக நாம் நடவடிக்க்கை எடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# போக்குவரத்துக்கு இடையூறாகும் தொலைத்தொடர்பு தூண்



வீதி ஓரத்தில் தொலைத் தொடர்பு தூண் அமைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக மன்னார் சாவற்கட்டு சிறிய குருமட வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் சிறிய குருமட வீதியின் ஊடாக பெரிய கமம் பகுதிக்குச் செல்லும் வளைவில் வீதிக்கு அருகாமையில் ரெலிக்கொம் நிலையத்திற்குச் சொந்தமான தூண் அமைக்கப்பட்டுள்ளது. இத்தூண் வீதிக்கு மிக அருகாமையில் உள்ளதனால் வீதியின் வளைவில் திரும்பும் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

வாகனங்களை குறித்த வளைவில் செலுத்தும் போது இடப்பற்றாக்குறை காரணமாக விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஏற்கனவே இப்பகுதியில் சிறிய விபத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இவ் வீதியூடாக சென்று வரும் நிலையில் குறித்த தூண் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு இது ஏதுவாக அமைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். எனவே இந்தத் தூணிற்கு பொறுப்பான அதிகாரிகள் இத் தூணை சற்று அகற்றி மக்கள் அசௌகரியமின்றி பயணிக்க ஏற்பாடு செய்து தருமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வறட்சியால் பாதிக்கப்படும் புங்குடுதீவில் நிழல் மரங்கள் மாணவர்களால் நடுகை



(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் கோடைகாலத்தில் கடும் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்படும்-கிராமங்களில் ஒன்றான புங்குடுதீவில் கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் சன்குமலாடி வீதியில் 500 நிழல் தரும் மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள். கிராம சேவையாளர், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் மர நடுகையில் ஈடுபட்டனர். இந்நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு மரநடுகை விழாவாகவே நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## முரசின் இன்றைய பலன்

(08.02.2015 ஞாயிற்றுக்கிழமை)

ஐய வருஷம் தை மாதம் 25 ஆம் திகதி.
சதுர்த்தி திதி /அமிர்தம் யோகம்.
உத்தர நட்சத்திரம். காலை 07.13 வரை. பின் அத்தம்.
இராகு காலம் 05.05 - 06.35வரை. சுபநேரம 09.35 - 11.05 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வாழ்க்கையில் நம்பகத்தன்மை அற்றுப்போனதால் உறவினைத் துண்டித்தல்.

**ரிஷபம்**
மிதிவெடி பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்**
நியாயம்பேச வெளிக்கிட்டு முரண்பாடும் உறவ்வக்கைவிடும் நிலைப்பாடும் ஏற்படல்.

**கடகம்**
பெற்றோரின் அறிவுரையைக் கேட்டதால் பேராபத்து விலகிவிடல்.

**சிம்மம்**
சுபச்செலவினைச் சமாளிக்க கடன்படும் நிலையில் இருத்தல்.

**கன்னி**
விண்ணப்பித்த வங்கிக்கடன் கிடைக்கும் செய்தியறிந்து மகிழ்தல்.

**துலாம்**
கைவிட்டிருந்த சகோதர உறவு மீண்டும் சுமுக நிலைக்கு வருதல்.

**விருச்சிகம்**
பிரயாணத்தின் போது ஆவணங்கள் தவறும் நிலைதக்க வைக்கும்.

**தனுசு**
வேலைப்பளுவினால் தேக நலம் பாதிப்படைந்து ஓய்வு நிலையை நாடல்.

**மகரம்**
விவாகத்தில் நிலவிய தடை அகன்று சம்பந்தக்கலப்பு ஏற்பட நாட்குறித்தல்.

**கும்பம்**
மாமனுடன் கொடுக்கல்வாங்கல் சம்பந்தமாக முறுகல் நிலை காணப்படுதல்.

**மீனம்**
ஏற்பட்ட அவமானம் பொறுமையைக்கடைப்பிடித்ததால் பிரச்சினையை ஏற்படுத்தாது விடல்.

# ஜொலிக்க காத்திருக்கும் சுழல் ஜாலங்கள்

## பலிக்குமா முரளியின் கணிப்பு



அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள 11ஆவது உலக கோப்பை தொடர் நெருங்கிவிட்டது. இன்று முதல் பயிற்சி ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. நடப்பு சம்பியனான இந்திய அணி கோப்பையை தக்கவைத்துக் கொள்ளுமா? ஏற்கனவே 4 முறை கோப்பையை முத்தமிட்டுள்ள அவுஸ்ரேலிய அணி, இம்முறை சொந்த மண்ணில் சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைக்குமா? இல்லை... இதுவரை கோப்பையை வெல்லாத அணி புதிய சம்பியனாகுமா? என்ற கேள்விகளும், அவற்றின் மீதான விவாதங்களும் இரசிகர்களை திக்குமுக்காட வைத்துள்ளன. போட்டிகள் நடைபெறவுள்ள அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப் பந்துவீச்சுக்கே அதிகம் சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த உலக கோப்பையில் சுழற்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு எந்த வகையில் அமையும் என்பது குறித்து இலங்கையின் முன்னாள் சுழல் நட்சத்திரம் முத்தையா முரளிதரனின் கணிப்பு:

**ஜடேஜா (இந்தியா)** இங்கிலாந்தில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ண மினி உலக கோப்பை தொடரில் இந்தியா கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர். துடுப்பாட்ட வீரர்கள் அடித்து ஆட முற்படும் போது விக்கெட் வீழ்த்தி நெருக்கடி கொடுப்பார். ஐ.பி.எல். போட்டி அனுபவமும் இவருக்கு உதவியாக இருக்கும். பந்து களத்தில் பட்டு கொஞ்சமும் திரும்பாமல் நேரடியாக விக்கெட்டை குறிவைத்து சீறும் வகையில் ஸ்கிட் செய்யக் கூடியவர். இதனால் எல்.பிடபுள்யு அவுட் ஆகும் வாய்ப்பு அதிகம். உடல்தகுதி மட்டுமே பிரச்சினையாக உள்ளது. அதை சமாளித்து திறம்பட செயற்படுவார் என நம்பலாம்.

**ஷாகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்):** பந்தை அதிகமாக சுழற்றி திரும்பவைக்க் கூடியவர் இல்லை என்றாலும், அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பிக் போஷ் ருவென்ரி-20 தொடரில் விளையாடிய அனுபவம் இவருக்கு வெகுவாகக் கை கொடுக்கும். அவற்றின் ஆடுகளங்களின் தன்மை பற்றி நன்கு அறிந்திருப்பது சாதகமான அம்சம். விக்கெட் வீழ்த்தாவிட்டாலும், அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்காமல் துல்லியமாகப் பந்துவீசி நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கிறேன்.

**யாசிர் ஷா (பாகிஸ்தான்):** தரமான இடதுகை சுழற்பந்து வீச்சாளர். 1992இல் முஷ்டக் அகமட் சாதித்தது போல, இந்த தொடரில் இவர் அசத்துவதற்கான வாய்ப்பு அதிகம். பந்து நன்றாக சுழன்று திரும்பும் வகையில் வீசக் கூடியவர். அவுஸ்ரேலிய ஆடுகளங்களில் நன்றாக எகிறவும் செய்யும் என்பதால், அபாயகரமான சுழற்பந்துவீச்சாளராக திகழ்வார் என்பதில் சந்தேகமில்லை.

**அப்ரிடி (பாகிஸ்தான்):** ஆடுகளங்களின் தன்மை பற்றி நன்றாக அறிந்தவர். பந்தை அதிக அளவில் சுழன்று திரும்ப வைப்பதுடன், கொஞ்சமும் சுழலாமல் நேரடியாக கால் காப்பை தாக்கும் வகையிலும் போடக் கூடியவர். அனுபவமும் திறமையும் இவரது பலம். யாசிர் ஷாவுடன் இணைந்து இரட்டை சுழலாக நிச்சயம் மிரட்டுவார். இவருக்கும் கடைசி உலக கோப்பை என்பதால், தனது முத்திரையை ஆழமாகப் பதிப்பார்.

**அஷ்வின் (இந்தியா):** சமீபத்தில் அவுஸ்ரேலியாவுடன் டெஸ்ட் தொடரிலும், அதைத் தொடர்ந்து முத்தரப்பு ஒருநாள் தொடரிலும் விளையாடிய அனுபவம் அஷ்வினுக்கு உதவிகரமாக இருக்கும். ஆஸி. ஆடுகளங்களில் இதுவரை பெரிதாக சாதிக்க முடியாவிட்டாலும், உலக கோப்பையில் சிறப்பாக பங்களிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. பந்து கூடுதலாக எழும்புவதை நன்றாகப் பயன்படுத்தி துடுப்பாட்ட வீரர்களை திணறிடிப்பார் என நினைக்கிறேன். பவர்பிளே ஓவர்களை வீசுவதில் வல்லவர். நல்ல சகலதுறை வீரரும் கூட என்பதால், இந்திய அணியில் இவரது பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

**டானியல் வெட்டோரி (நியூசிலாந்து):** அனுபவமும், உள்ளூரில் போட்டிகள் நடப்பதும் இவருக்கு சாதகமான அம்சங்கள். முன்பு போல களத்தடுப்பில் துடிப்பாக செயற்பட முடியாது என்றாலும், துல்லியமாகப் பந்துவீசி துடுப்பாட்ட வீரர்களைத் திணறடிப்பார் என்பதில் சந்தேகமில்லை. பந்தை நன்றாக பிளைட் செய்வதுடன், ஒவ்வொரு பந்தையும் வித்தியாசமாகப் போடுவது தனிச்சிறப்பு. இவரை அடித்து ஆட நினைப்பது தற்கொலைக்கு ஒப்பாகவே இருக்கும். இதுவே இவர் பங்கேற்கும் கடைசி உலக கோப்பையாக இருக்கும் என்பதால், வெற்றியுடன் விடைபெற வேண்டும் என்ற வேட்கையும் விக்கெட் வேட்டைக்கு உதவும்.

**சசித்ர சேனநாயக்க (இலங்கை)** அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆடுகளங்கள் இவரது பாணி பந்துவீச்சுக்கு ஏற்றவையாக இருப்பது சாதகமான அம்சம். பந்து நன்றாக பவுன்ஸ் ஆவதை பயன்படுத்தி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுப்பார். களத்தடுப்பில் துடிப்பானவர் என்பதுடன், கடைசிக் கட்ட ஓவர்களில் அதிரடி துடுப்பாட்ட வீரராக அவதாரம் எடுக்கக் கூடியவர் என்பதால் ரங்கன ஹேரத்தை பின்னுக்குத் தள்ளி, இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக இருப்பார். இம்ரான் தாஹிர் (தென்னாபிரிக்கா), முகமது நபி (ஆப்கானிஸ்தான்), ஜோர்ஜ் டாக்ரெல் (அயர்லாந்து) ஆகியோரும் சுழல் நட்சத்திரங்களாக ஜொலிப்பார்கள் என நினைக்கிறேன் என முரளிதரன் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

## ஓய்வுபெறும் எண்ணமில்லை

ஓய்வு குறித்து நான் இன்னமும் சிந்திக்கவில்லை. அதற்கான காலமும் இது அல்ல. கிண்ணத்தை வெல்ல முடியாமல் போனால் போட்டியிலிருந்து ஓய்வுபெறவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அஸி. ஓப்பன் ரென்னிஸ் தொடரில் எதிர்பாராத விதமாக தோல்வியடைந்ததை வைத்துக் கொண்டு எனது திறன் குறைந்துவிட்டதாக மதிப்பிடக்கூடாது. இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆடக்கூடிய ஆற்றல் என்னிடம் இருப்பதாக நினைக்கின்றேன். உடற்தகுதியும் சிறப்பான முறையில் இருக்கின்றது. எப்போது ஓய்வு என என்னிடம் வினாவுவது என்னை வேதனைக்குள்ளாக்குகின்றது. தயவு செய்து இக்கேள்வியை என்னிடம் யாரும் கேட்கவேண்டும் என சுவிஸின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் பெடரர் தெரிவித்துள்ளார்.

## ஜொலிக்கும் வைரம் ரொனால்டோ



உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் கிறிஸ்டியானோ ரொனால்டோவை தெரியாதவர்கள் இருக்க முடியாது. சமீபகாலமாக, செய்திகளில் ரொனால்டோ் தவறாது இடம்பெறுகிறார். அவரது சர்ச்சைகள் முதல் சாதனைகள் வரை அனைத்துமே அடிக்கடி பேசப்படுகின்றன.

இந்நிலையில், கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் சோஷியாலஜி பாடப்பிரிவில் அவரது வாழ்க்கை சாதனைகளை இடம்பெற செய்துள்ளது. 'உலகம் முழுவதிலும் ரொனால்டோவின் செல்வாக்கு எப்படி உயர்ந்தது? என்பதை ஆய்வு செய்வதாக இந்த பாடம் அமைந்துள்ளதாக அந்த பாடத்தை கற்றுக் கொ்டுக்கும் பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லூயிஸ் அகுயர் 'தெரிவித்தார்.



## 14 வருடங்களின் பின்னர் இண்டியன் வெல்ஸில் செரீனா

பார்வையாளர்களின் இனரீதியான அவதூறுக்கு உள்ளானதை அடுத்து இண்டியன் வெல்ஸ் ரென்னிஸ் போட்டிகளை 14 வருடங்களாக புறக்கணித்து வந்த செரீனா வில்லியம்ஸ் இவ்வருடம் பங்குபற்றுவதற்கு முன்வந்துள்ளார்.

கலிபோர்னியா இண்டியானா வெல்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டிகள் 2001இல் நடைபெற்றபோது செரீனா வில்லியம்ஸும் அவரதுகுடும்பத்தினரும் பார்வையாளர்களினால் இனரீதியாக அவமதிக்கப்பட்டிருந்தனர்.

கிம் கிளைஸ்டர்ஸுடான போட்டி முழுவதின் போதும் அவமதிக்கப்பட்டதைப் பொறுக்க -முடியாத செரீனா அதன் பின்னர் அங்கு விளையாடுவதைத் தவிர்த்து வந்தார். ஆனால் இவ்வருடம் அங்கு விளையாடத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரென்னிஸ் விளையாட்டின் மீது கொண்டுள்ள அளவற்ற பற்றுதல் காரணமாக நான் விளையாடுகின்றேன். மேலும் மன்னிப்பின் உண்மையான பொருளை வெளிப்படுத்தும் பொருட்டு நான் பெருமையுடன் இண்டியன் வெல்ஸ் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளேன் என செரீனா வில்லியம்ஸ் தெரிவித்தார்.

ICC CRICKET WORLD CUP 2015

## களத்திற்கு வெளியில்....

இலங்கைக் குழாமானது சமபலத்தைக் கொண்டிருக்கிறது. அனுபவ துடுப்பாட்ட வீரர்களைத் தன்னகத்தே வைத்துள்ளது. குறிப்பாக, டில்சான், சங்கக்கார, மஹேல போன்றவர்கள் நீண்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்கள். ரங்கன ஹேரத், சேனநாயக்க போன்ற சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களையும் அது கொண்டிருக்கிறது. மலிங்க உபாதையிலிருந்து மீளும் பட்சத்தில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சும் மேலும் பலம்பெறும். எனவே, எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியால் சாதிக்க முடியும்.

**ராகுல் ராவிட் (இந்தியா)**

இலங்கை அணியில் உயர்ந்த திறன்களைக் கொண்ட அனுபவ வீரர்கள் காணப்படுகின்றார்கள். அவர்களால் நீண்ட நேரம் களத்தில் நிலைத்திருக்க முடியும். முன்வரிசையில் களமிறங்கும் அனுபவ வீரர்களான டில்சான், சங்கக்கார, மஹேல போன்றவர்கள் உயரிய திறமைகளின் வெளிப்பாட்டால் கனிஷ்ட வீரர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும். கப்டன் மத்தியூஸ் சிறப்பான துடுப்பாட்டத்தையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்தி வருகின்றமை இலங்கை அணிக்கு மேலதிக பலம்.

**கிரஹம் ஸ்மித் (தென்னாபிரிக்கா)**

கடந்த சில வருடங்களாக எந்தவொரு கிரிக்கெட் வீரரும் சிறப்பான செயற்பாட்டை தொடர்ச்சியாக வெளிப்படுத்தவில்லை. ஆனால், இலங்கை அணியின் சங்கக்கார டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமின்றி ஒரு நாள் போட்டிகளிலும் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். சங்காவின் இந்த திறமை மற்றும் அனுபவம் இந்த உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு ஊக்கமளிக்கும் விதமாக அமையும் என நம்புகின்றேன்.

**விவியன் ரிச்சர்ட்ஸ் (மே.தீவுகள்)**

எதிர்வரும் உலகக் கிண்ண தொடரில் தென்னாபிரிக்க அணி தோல்விகளைச் சந்தித்து நாடு திரும்பக் கூடாது. பொறுப்புடன் ஆடவேண்டும். எந்த அணியையும் சாதாரணமாக கருதிவிடாது சிறப்புடன் செயற்படவேண்டும். ரோபோக்களுக்கு எதிராக நீங்கள் ஆடவில்லை. மனிதர்களுடன் தான் நீங்கள் ஆடுகின்றீர்கள் என்பதை எப்பொழுதும் மனதில் நிறுத்த வேண்டும்.

**மலுலா (தென்னாபிரிக்க விளையாட்டு அமைச்சர்)**

இளம் கப்டன் ஸ்ரீபன் ஸ்மித் அபாரமாக ஆடி வருகிறார். இதனால், அவுஸ்ரேலியாவுக்கு இரண்டு கப்டன்கள் கிடைத்துள்ளனர். இது அடிக்கடி நிகழாது. எனவே, கிளார்க், ஸ்ரீபன் ஸ்மித் ஆகியோருக்கு இடையே பிளவு ஏற்படுத்துவ்தை நிறுத்திவிட்டு, இரு அருமையான கப்டன்கள் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**ஸ்ரீவோ (அவுஸ்ரேலியா)**

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் நான் பங்கேற்பது குறித்த கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. இதை, அணியின் மருத்துவக் குழுவினரிடம்தான் கேட்க வேண்டும்.

**மைக்கல் கிளார்க், (அவுஸ்ரேலியா)**

உலக கோப்பை போட்டிக்கான இந்திய அணியில் காயமடைந்த வீரர்கள் அதிகம் பேருக்கு இடம் கொடுத்திருப்பது தவறானதாகும். இது இந்திய அணி உலக கோப்பையை தக்க வைத்து கொள்ள தடையாக இருக்கக்கூடும்.

**வெங்சர்க்கார் (இந்தியா)**

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் என்பது எப்போதும்மிகப்பெரிய ஆட்டமாகும். உலக கோப்பை போட்டிகளில் எங்கள அணி பாகிஸ்தானிடம் தோற்றதில்லை. களமிறங்கும் போது ஒவ்வொருவரின் மனதிலும் அந்த எண்ணம் ஓடும். சிறந்த வீரர்களைக் கொண்ட அணியாக இந்தியா இருப்பதாக நம்புகிறேன்.

**முகமட் அசாருதீன் (இந்தியா)**

கடந்த உலக கோப்பை போட்டிகளுடன் ஒப்பிடும் போது 2015ஆம் ஆண்டு உலக கோப்பை நிச்சயம் கொஞ்சம் வித்தியாசமானதாக இருக்கும். மாற்றம் செய்யப்பட்ட விதிமுறைகள், ருவென்ரி-20 கிரிக்கெட்டின் தாக்கம், வீரர்களின் புதுமையான துடுப்பாட்ட யுக்திகள் இந்த முறை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்

**சச்சின் (இந்தியா)**

# யாழ். இந்துவின் வீதியோட்டம்; சஜீபன், சுபராஜ் முதலிடம்





யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட வீதியோட்டப் போட்டியில் வி. சஜீவன் மற்றும் எஸ். சுபராஜ் ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் வீதியோட்டம் நேற்று முன்தினம் இளநிலை, முதுநிலை என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. 250இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்குகொண்ட இப்போட்டியை யாழ்ப்பாண கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் ஆரம்பித்து வைத்தார். கல்லூரி முன்றலில் ஆரம்பமான இப்போட்டி மீண்டும் கல்லூரி முன்றலில் நிறைவடைந்தது. இளநிலைப் பிரிவில் முதலிடத்தை வி. சஜீபன், இரண்டாமிடத்தை நி. ஆதவன், மூன்றாமிடத்தை ந. பானுஜன் ஆகியோர் பிடித்துக் கொண்டனர். முதுநிலைப் பிரிவில் முதலிடத்தை எஸ். சுபராஜ், இரண்டாமிடத்தை எஸ்.ஜெசிந்தன், மூன்றாமிடத்தை தோ. நிரோஜன் ஆகியோர் பிடித்துக்கொண்டனர்.

## வளர்மதி சம்பியன்

(அராலி)

அராலிமாவத்தைவிளையாட்டுக்கழகம் நடாத்திய கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மூளாய் வளர்மதி அணி கைப்பற்றிக் கொண்டது. வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த புதன்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மூளாய் வளர்மதி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மூளாய் வளர்மதி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் அராலி பாரதி அணியும், அராலி திருமகள் அணியும் மோதின. இதில் பாரதி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக சுதாகரன், போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக சுரேந்தர், சிறந்த கோல் காப்பாளராக சசி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (93)

விளையாட்டுச் செய்திகள்

## விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் விருது வழங்கும் விழா நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விருது வழங்கும் விழாவின் பிரதம அதிதியாக யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் பெற்றோர் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பாடசாலை சமூகம் கேட்டுள்ளது. (105)

# வேலணைப் பிரதேச செயலக பெருவிளையாட்டு; சம்பியன் வென்ற அணிகள்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளது. கடந்த வாரம் வேலணை துறையூர் ஐயனார் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வருமாறு:

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் நயினாதீவு அண்ணா அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. இதில் அண்ணா அணி 17-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் நயினாதீவு அண்ணா அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. இதில் அண்ணா அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்கள் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. இதில் சண்ஸ்ரார் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு நசரைத் அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 31-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் நசரைத் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்கள் கபடிப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. இதில் சண்ஸ்ரார் அணி 29-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான எல்லே போட்டியின் இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி அணியும் வேலணை துறையூர் ஐயனார் அணியும் மோதின. இதில் பாரதி அணி 1-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது..

ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி அணியும் நசரைத் அணியும் மோதின. இதில் நசரைத் அணி 4-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் ஃகைப்பற்றிக் கொண்டது. (93)

## பாடசாலை மட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டி







கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி (48)





உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் (137)

# விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளாத அல்லது விரும்பாத பெரும்பாலானவர்களைக் கொண்டது தமிழ்ச்சமூகம்

## நேர்காணல் - சாத்திரி 1

சாத்திரி என்றால் சோதிடர் என்று சொல்வார்கள். இந்தச் சாத்திரி சோதிடர் அல்ல. படைப்பாளி. கலகக்காரன். அதற்கு முன் 1983 இல் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்ட அந்த அமைப்பின் உறுப்பினர் அல்லது ஈழப்போராளி. இன்னொரு வகையில் சொன்னால், புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் - பிரான்ஸில் வாழ்கின்ற அகதி.

ஒரு காலம் தான் பிரதிநிதித்துவம் செய்த அமைப்புக்காகவே எதையும் செய்த, எல்லாவற்றையும் செய்ய முனைந்த சாத்திரி இப்பொழுது அவற்றையெல்லாம் மீளாய்வு செய்கிறார். போராட்டம் வெற்றியடைந்திருந்தால் என்னுடைய இந்தப் பார்வை கூட வேறுபட்டிருக்கும். ஆனால் இன்று போராட்டம் தோல்வியடைந்து, புலிகள் அமைப்பும் வீழ்ந்து விட்டது. எனவே இப்பொழுது நாம் எல்லாவற்றையும் மீளாய்வு செய்தே ஆகவேண்டும். வெறும் கற்பனைகளிலும் குருட்டுத்தனமான நம்பிக்கைகளிலும் தொடர்ந்தும் இருந்து விட முடியாது என்று சொல்லும் சாத்திரிக்கு தமிழ்ச் சூழலில் கடுமையான எதிர்ப்பும் உண்டு.

இதனால் சாத்திரியின் எழுத்துகள் கடும் சர்ச்சைகளை உண்டு பண்ணி வருகின்றன. ஆனாலும் அவர் பின்வாங்கவேயில்லை. அண்மையில் தான் எழுதிய (2015 ஜனவரியில்) "ஆயுத எழுத்து" என்ற புதிய நாவல் ஒன்றைச் சாத்திரி சென்னையில் வெளியிட்டார். அந்த வெளியீட்டு நிகழ்வே பல எதிர்ப்புகளின் மத்தியில்தான் நடந்தது. இந்த வெளியீட்டுக்காக சென்னை வந்திருந்த சாத்திரியிடம் பேசினேன்.

- கருணாகரன் -

1- உங்களுடைய நாவல் ஆயுத எழுத்தை சென்னையில் வெளியீடு செய்வதற்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒரு அமைப்பினர் ஈடுபட்டிருந்தார்கள். இறுதியில் சேப்பாக்கத்தில் காவல்துறையினரின் பாதுகாப்போடு நிகழ்வு நடந்ததை பார்த்தேன். இந்த நாவலை எதிர்க்கும் அளவுக்கு என்ன முக்கியமான விடயங்கள் என்ன இதில் உண்டு? யார் எதிர்க்கிறார்கள்?

**சாத்திரி:** இந்த நாவலை நான் எழுதி வெளியிட தீர்மானித்த போதே அதுக்கான எதிர்ப்புகள் கிளம்பும் என எதிர்பார்த்ததுதான். காரணம்




பொதுவாகவே விமர்சனம் என்கிற ஒன்றை ஏற்றுக்கொள்ளாத அல்லது விரும்பாத பெரும்பாலானவர்களை கொண்ட ஒரு சமூகமாகதான் தமிழ் சமூகம் உள்ளது. தவறுகளை தட்டிக் கேட்காமலும் அதை மழுப்பி மறைத்து விட பழக்கப் பட்டவர்களாகவே நாம் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளோம். இந்த மான உணர்வு தான் எனது நாவலையும் எதிர்க்கத் தூண்டியிருக்கலாம்.

காரணம் முப்பதாண்டு கால ஆயுதப்போராட்டத்தில் நடந்த சில தவறான சம்பவங்களை - தவறான விடயங்களை - எனது நாவலில் பதிவு செய்துள்ளேன். அந்தச் சம்பவங்கள் - அந்த விடயங்கள் - வெளியே வந்துவிடக் கூடாது அவைகளை மீள் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படக் கூடாது என்பதில் தமிழகத்தை சேர்ந்த தீவிர தமிழ் தேசியவாதிகளாக காட்டிக் கொள்ளும் சிலர் முனைப்புடன் செயற்படுகின்றனர். அவர்களே எனது நாவல் வெளியீட்டையும் தடுக்க முயன்றனர். ஆனால் நான் வெளியீட்டு மண்டபத்துக்கு செல்லுமுன்னரே தகவல் அறிந்த காவல்துறையினர் அங்கு எந்த அசம்பாவிதங்களும் நடந்து விடாமல் தடுப்பதற்காக பாதுகாப்பை பலப்படுத்தியதோடு நிகழ்வு எந்தவித இடையூறும் இன்றி நடக்க உதவினார்கள்.

2- வெளியீட்டில் கலந்து கொள்வதாகத் தெரிவித்திருந்த பேச்சாளர்கள், திரைப்பட இயக்குனர் வீ.சேகரும் திராவிடர் கழகத்தை சேர்ந்த அருள்மொழியும் பங்கெடுக்காது விட்டதன் காரணம் என்ன?

**சாத்திரி:** வீ.சேகர் நிகழ்வு நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் என்னோடு சில விடயங்கள் தனியாக பேசவேண்டும் என வீட்டிற்கு அழைத்திருந்தார். அவரது வீடிற்கு சென்றிருந்தேன். எனது நாவல் வெளியீட்டில் கலந்துகொள்ள வேண்டாம் என பழ.நெடுமாறனும் இயக்குனர் கௌதமனும் அழுத்தம் தருவதாகவும் தான் நாவலை முழுமையாக படித்துவிட்டேன் அதில் தனக்கு சங்கடமான விடயங்கள் எதுவும் இல்லை ஆனால் நாவலை படிக்காமலேயே இவர்கள் ஏன் அப்படியொரு அழுத்தத்தினை தன்மீது பிரயோகிக்கின்றார்கள் என்று புரியவில்லை என்று கூறியவர், தான் இப்போ இயக்குனர் சங்கத்தில் முக்கிய பொறுப்பில் இருப்பதாலும் திரைத்துறையில் அடிவாங்கி நீண்ட காலமாக எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டு இப்போதான் தனது மகனை வைத்து ஒரு படம் பண்ணிக் கொண்டிருப்பதால் தமிழ்நாட்டில் யாரையும் பகைத்துக்கொள்ள விருப்பம் இல்லை. தனது நிலையை புரிந்துகொள்ளுமாறு என் கைகளை பிடித்து கேட்டுக் கொண்டார்.

சுமார் இரண்டு மணிநேரம் அவரோடு பேசிய பின்னர் அவரது நிலை புரிந்தது. நிகழ்வுக்கு அவர் வராது விடுவதால் எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று தெரிவித்து விட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் எனது நிகழ்வை வீ.சேகர் புறக்கணித்தார என்றொரு அறிக்கையை இயக்குனர் கௌதமன் வெளியிட்டதாக புலம்பெயர் தேசத்து இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.


அடுத்ததாக அருள்மொழி அவர்கள் தான் கலந்து கொள்ளாத காரணத்தை தனது முகப்புத்தகத்திலேயே குறிப்பிட்டுள்ளார். அவர் சொன்ன காரணம் என்னவெனில் எனது நிகழ்வில் பங்கெடுக்க சம்மதம் தெரிவித்திருந்தாலும் அதில் பங்கெடுக்கும் மற்றயவர்கள் பெயர்களை அழைப்பிதழில் சரியாக கவனிக்கவில்லை என்றும் நிகழ்வுக்கு கேர்ணல் ஹரிகரன் வருவதால் ஒரு இந்திய இராணுவ அதிகாரியோடு ஒரே மேடையில் அமர்ந்து நிகழ்வில் கலந்துகொள்வது தனது கட்சி சார்ந்து பல சர்ச்சைகளை கிளப்பும். அவற்றை தவிர்க்கவே நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இது தவிர தனக்கு வேறு அழுத்தங்களோ பிரச்சினைகளோ இல்லை என்று தெரிவித்திருந்தார்.

3- புத்தக கண்காட்சியில் ஆயுத எழுத்தை விற்பனை செய்யக் கூடாது என்று சிலர் புத்தக கடைகளில் வந்து விற்பனையாளர்களை அச்சுறுத்தியிருந்தார்கள். இது பெருமாள் முருகனுக்கு ஏற்பட்டதைப்போல கருத்து சுதந்திரத்தை மீறும் செயல் என்று நீங்கள் எதிர்ப்புக்காட்டமல் விட்டது ஏன்?

**சாத்திரி:** சென்னை புத்தக கண்காட்சியில் எனது நாவலை சுமார் பதின்மூன்று கடைகளில் விற்பனைக்காக கொடுத்திருந்தேன். அதில் நான்கு கடைகளில் மட்டுமே சிலர் வந்து மிரட்டிவிட்டுப் போயிருந்தனர். மிரட்டப்பட்டவர்கள் புத்தகங்களை மறைத்து வைத்து விற்பனை செய்தார்கள். ஆனால் பெருமாள் முருகனுக்கு நடந்த அளவுக்கு எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்திருக்கவில்லை என்பது மட்டுமல்லாது இது போன்ற பல பூச்சாண்டி விளையாட்டுக்கள் எனக்கு பழகிப்போன ஒன்று என்பதால் நான் சிறுபிள்ளைத்தனமான செயல்களை கண்டுகொள்ளவில்லை.

(மிகுதி நாளைய தினமுரசில்)

# ஒட்டகத்துக்கும் ஆடை!



ஐக்கிய அரபு நாடுகளில், விலங்குகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு தேவையான பொருட்களை விற்பனை செய்யும், அல் - ஷிபலால் நிறுவனம், இப்போது, புதுமையான வியாபார தந்திரத்தை பின்பற்றுகிறது. அரபு நாடுகளில் ஒட்டகங்கள் அதிக அளவில் உள்ளதால், அவற்றுக்கு உடை தயாரிக்கும் முயற்சியில் இறங்கி, அதில் வெற்றியும் கண்டுள்ளது. ஒட்டகங்களின் அளவுக்கேற்ப, வித விதமான உடைகளை தயாரிக்கிறது, அந்த நிறுவனம். ஒட்டகத்தின் கழுத்து மற்றும் தலை ஆகியவற்றை தவிர, மற்ற அனைத்து பாகங்களையும் மறைக்கும் வகையில், கச்சிதமான உடைகள் தயாரிக்கப்படுகின்றன. "ஒட்டகங்களுக்கு உடை அணிவதால் என்ன நன்மை?" என, கேட்டால், "அட, சும்மா இல்லை.. இந்த உடைகளை அணிவதால், ஒட்டகங்களின் ரத்த ஓட்டம் சீராக இருக்கும்..." என்று, குண்டொன்றைப் போட்டு வாயை அடைக்கின்றனர்.

ஔவையின் ஆத்திசூடியில் "ங போல் வளை" என்பதன் விளக்கத்தைத் தமிழாசிரியர்கள் பொதுவாகக் கீழ்கண்டவாறு சொல்வார்கள்:

"ங" என்ற எழுத்து மற்ற எழுத்தோடு சேரும்போதுதான் பொருள் தரும். ஆனால் "ங"வோடு சேர்ந்த ஙா, ஙி போன்ற எழுத்துக்கள் பயனில்லாதவை. இருப்பினும் பயனில்லாதவர்களையும் தன்னோடு இணைத்துக் கொள்கிறது "ங" என்ற எழுத்து. அதுபோல பயனில்லாதவர்களையும் ஒதுக்கிவிடாமல் தன்னோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இதன் கருத்து. ஆனால் நீதியரசர் கற்பகவிநாயகம் அவர்கள் சொன்ன விளக்கம் புதுமையாக இருந்தது. அது என்ன?

"ங" என்ற எழுத்து மேலே சென்று படுக்கைக்கோடாக அமைந்து கீழே இறங்கி வளைந்து நேர்கோடாகி மேலே செல்கிறது. இந்த எழுத்தைப் போலவே

# 'ங போல் வளை"



ஒரு புள்ளியில் வாழ்க்கையைத் தொடங்கி உயர வேண்டும். உயர்ந்தபின் அதே உயரத்தில் இருக்கும் உயர்ந்தவர்களோடு இணைந்து பழகி அவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் துறையில் மேலும் ஆய்ந்து ஆழமாக இறங்க வேண்டும். ஆழமாகப் பாயும்போது ஒரு மமதை வரும். அதில் அகப்பட்டுக் கொள்ளாமல் பணிந்து வளைய வேண்டும். அப்படி வளைந்து தனக்குக் கீழே உள்ளவர்களையும் இணைத்துக்கொண்டு அவர்களோடு உயரச் செல்ல வேண்டும். இதுதான் "ங" என்ற எழுத்து சொல்லும் பாடம்.

('ஒரு நீதியரசரின் நெடும் பயணம்' நூலில் ராணி மைந்தன்.)

# பாடிய முதல் பாட்டு!

இந்தியாவின் நைட்டிங்கேல் என்றழைக்கப்படும் லதா மங்கேஷ்கருக்கு தற்போது 85 வயதா-

சக்திதான் என்னை நிலை... இது என்னுடைய திறமையி...

# பாடிய முதல் பாட்டு!

★ பி.சுசீலா முதன்முதலாகத் தமிழில் பாடிய படம் "பெற்ற தாய்". அதில் அவர் பாடிய பாடல் "ஏன் அழைத்தாய் என்னை ஏன் அழைத்தாய்" என்பதாகும். அப்படத்திற்கு இசையமைத்தவர் பெண்டியாலா.

★ டி.எம்.சௌந்தரராஜன் "கிருஷ்ண விஜயம்" படத்தில் எஸ்.எம். சுப்பையா நாயுடு இசையில் நான்கு பாடல்கள். எம்.ஜி.ஆருக்காகக் குரல் கொடுத்த முதல்படம்: "மலைக்கள்ளன்". பாடல்: எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே". இதற்கும் இசையமைத்தவர் எஸ்.எம்.சுப்பையா நாயுடு.

★ எஸ்.ஜானகியின் முதல் பாடல் பி.பி.ஸ்ரீனிவாஸுடன் இணைந்து பாடிய "கண்ணுக்கு நேரே மின்னிடும் தாரை". படம்: ஆர்.பார்த்தசாரதி இசையமைத்த முதல் படமான "மகதலநாட்டு மேரி".




★ பி.பி. சீனிவாஸ் முதன்முதலாகப் பாடிய தமிழ்ப் பாடல் "சிந்தனை என் செல்வமே" என்பதாகும். இடம் பெற்ற படம்: "ஜாதகம்".

★ பி.லீலா பாடிய முதல்பாடல் "ஜெகம் புகழும் புண்ணிய கதை". படம்: "லவகுசா".

★ சீர்காழி கோவிந்தராஜனின் முதல் திரைப்பாடல் சுத்தானந்த பாரதி எழுதிய "சிரிப்புதான் வருகுதைய்யா". படம் "பொன்வயல்". இசை: துறையூர் ராஜகோபால சர்மா.

★ கே.ஜே.ஜேசுதாஸ் தமிழில் பாடிய முதல் பாடல் "பொம்மை" படத்தில் "நீயும் பொம்மை நானும் பொம்மை". இசை: எஸ்.பாலசந்தர்.

★ ஜிக்கியின் முதல் பாடல் "ஞானசௌந்தரி" படத்தில் "அருள் தரும் தேவமாதாவே". இசை: எஸ்.வி.வெங்கடராமன்.

★ ஏ.எம்.ராஜாவின் முதல் தமிழ்ப் பாடல் "சம்சாரம்" படத்தில் இடம்பெற்ற "சம்சாரம்... சம்சாரம்". இசை: ஈமனி சங்கர சாஸ்திரி.

★ மனோரமா முதலில் பாடியது கே.வி.மகாதேவன் இசையில் "போகாதே போகாதே என் கணவா". படம்: கண்ணதாசன் தயாரித்த "ரத்தத் திலகம்".

★ எல்.ஆர்.ஈஸ்வரி பாடிய முதல்பாடல் "அவரேதான் இவரு, இவரேதான் அவரு". படம்: "நல்ல இடத்து சம்பந்தம்".

★ "பொண்ணு ஊருக்குப் புதுசு" படத்தின் மூலம் முதன் முதலாகத் தமிழில் பாடினார் எஸ்.பி. சைலஜா. அவர் பாடிய பாடல்: "சோலைக் குயிலே" படத்தின் இசையமைப்பாளர்: இளையராஜா.

இந்தியாவின் நைட்டிங்கேல் என்றழைக்கப்படும் லதா மங்கேஷ்கருக்கு தற்போது 85 வயதாகிறது. சிறுவயதிலேயே குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். அவர் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை

# திரைப்படங்களின் உயிர்நாடி சங்கீதம்

**- லதா மங்கேஷ்கர் -**

நினைவுகூர்ந்து பேசியதிலிருந்து:

"மக்கள் என்னை நேசிக்குமளவிற்கு நான் சிறப்புக்குரியவளா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த பெருமை யைப் பெறுவதற்கு என்னுடைய கடினமான உழைப்பே காரணம் என்று நினைக்கிறேன். ஒரு சிலர் புகழ் பெறுவதற்காகவே பிறக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருத்தி. என்னைப்பற்றி அதிகமாக நான் சிந்தித் ததைவிட என் குடும்பத்தைப் பற்றியே அதிகமாக நான் சிந்தித்திருக்கிறேன்.

என்னுடைய பதினோராவது வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது குறித்து நான் பெருமையடைகிறேன். பொருளாதாரரீதியாக குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது குறித்து நான் வருத்தப்பட்டதில்லை. நல்ல செல்வந்தர்கள் குடும்பங்களைப் பார்த்தீர்களானால் அவர்களது குழந்தைகள் பெற்றோர்களின் பணத்திற்காக கையேந்தி நிற்பார்கள். என்னுடைய குடும்பத்தைப் பொறுத்தவரை உடன் பிறந்தவர்கள் ஆஷா, மீனா, உஷா, என்னுடைய சகோதரன் அனைவருமே மற்றவர்களை எதிர்பார்க்காமல் அவரவர் திறமையால் வளர்ந்தவர்கள். 14ஆவது வயதிலேயே ஆஷா வீட்டிலிருந்து வெளியேறி அவளது வாழ்க்கையை அவளே தேடிக் கொண்டாள்.

என்னுடைய சகோதரனைப் பற்றி சொல்ல வேண்டுமானால் அவனுக்கு நான்கு வயதாகும்போது எலும்புருக்கி நோய் ஏற்பட்டது. நோயின் தாக்கத்தால் அவனது கால்கள் நிரந்தரமாக ஊனமாயிற்று. சகோதரிகள் நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் அவனை தூக்கிச் செல்வோம். 1943 ஆம் ஆண்டில் கோலாப்பூரில் பழங்குடி வைத்தியம் மூலமாக அதிசயத்தக்க வகையில் அவன் குணமடைந்தான்.

என்னுடைய வாழ்க்கையில் நான் எதற்காகவும் வருத்தப்பட்டதில்லை. திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பும் அமையவில்லை. அதற்காகக்கூட நான் வருந்தியதும் இல்லை. என்ன நடக்க வேண்டுமென்று இருக்கிறதோ அதன்படிதான் நடக்கும் என்பதை நான் நம்புகிறேன்.

பொழுதுபோக்குத் துறையில் உங்களால் எப்படி சக்திவாய்ந்த பெண்மணியாக விளங்க முடிகிறது என்று பலரும் என்னைக் கேட்பதுண்டு. என்னுடைய பணியின் மூலம் கிடைக்கும் புகழை நான் தவறாகப் பயன்படுத்துவதில்லை. இந்த சக்திதான் என்னை நிலை நிறுத்தியுள்ளது. இது என்னுடைய திறமையின் மூலமாக கிடைத்ததாகவே கருதுகிறேன்.

பாடலை எப்படிப் பாட வேண்டுமென்பதை தீர்மானிக்க எனக்கு ஐந்து நிமிடங்கள் போதும். இதை எனக்கு கடவுள் கொடுத்த வரமாகவே கருதுகிறேன். நௌஷத் அவர்கள் கூட, "ஓகே. எப்படி



பாடுவதென்பதை பிக்-அப் செய்துவிட்டாய். இருந்தாலும் நாளை ஒருமுறை ஒத்திகை பார்த்துவிடலாம்" என்பார்.

ஆஷாவும் நானும்... இருவருமே ஒன்றை ஒன்று இணைந்தாற் போல் உள்ள தொடர்மாடியில் தான் வசிக்கிறோம். எங்கள் இருவரது வீட்டிற்கும் இடையே உள்ள வாசல் வழியாக எப்போது வேண்டுமானாலும் சென்றுவரலாம். ஆஷா சிறுவயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டவள் என்பது தவிர அவளுக்கும் எனக்கும் எந்தவித பேதமும் இல்லை.

அவளுக்கு எந்த வகையான பாடலையும் பாடும் திறமை இருக்கிறது. ஆனால் அவள் என்னுடைய பாணியை பின்பற்ற எப்போதும் முயற்சித்ததில்லை. ஒருவேளை அப்படி பாட ஆரம்பித்திருந்தால் எங்களிருவருக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டிருக்கலாம். அவளது பாணியிலேயே பாடி அவளுக்கென்று புகழைத் தேடிக்கொண்டாள்.

என்னுடைய வாழ்க்கையில் கிஷோர்குமார், முகேஷ், முகமதுநபி, மதன்மோகன், சலீல் சவுத்ரி, சங்கர் ஜெய்கிஷன், ஹேமந்த் குமார், நௌஷத் ஆகியோரை இழந்தது மிகப் பெரிய துயரமாகும். நௌஷத் அடிக்கடி அவரது வீட்டிற்கு என்னை அழைத்து விருந்தளிப்பதுண்டு. நல்ல நண்பர் மட்டுமல்ல, திறமைசாலியும் கூட.

நான் எந்த அளவிற்கு உழைத்தேனோ அந்த அளவுக்கு பேரும் புகழும் கிடைத்துவிட்டது. என்னைவிட திறமையாகப் பாடுபவர்கள் நிறையபேர் இருந்தாலும் அவர்களது உழைப்பிற்கேற்ற புகழ் கிடைக்காதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. திரையுலகத்திற்கு வெளியேயும் திறமைசாலிகள் உள்ளனர். நல்ல பாடகர்கள் வசதியின்றி இருப்பதையும் பார்க்கிறேன்.



நான்தான் பாடவேண்டுமென்று பல இசையமைப்பாளர்கள் மாதக்கணக்கில் காத்திருந்ததுண்டு. அன்றைய காலகட்டத்தில் திரைப் படங்களுக்கு இசை முக்கியமாக கருதப்பட்டது. இசையமைப்பாளர்கள்தான் ராஜா. இசைதான் திரைப்படங்களுக்கு உயிர் நாடியாக இருந்தது.

அனைத்து இசையமைப்பாளர்கள் இசையில் நான் பாடியிருந்தாலும் ஓ.பி.நய்யார் இசையமைப்பில் நான் பாடியதில்லை. அவரது பாணி எனக்கு ஒத்துவரவில்லை. இதை அவரே வெளிப்படையாகக் கூறத் தயங்கியதில்லை. கீதாதத், ஆஷா போன்ஸ்லே பாடுவது போல் என்னால் பாடமுடியாது. அவர் முதன்முறையாக இசையமைக்க ஒப்புக் கொண்டபோது முதலில் என்னைத்தான் பாட அழைத்தார். நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஒருவேளை முதன்முதலாக பாட அழைத்தபோது நான் மறுத்தது அவருக்கு உறுத்தலாகி அதனால்தான் கடைசிவரை என்னைப் பாட அழைக்கவில்லையோ என்றே இப்போது கருதுகிறேன்".

# சல்மான் ருஷ்டியின் புதிய நாவல்



பிரபல ஆங்கில நாவலாசிரியர் சல்மான் ருஷ்டி(67)யின் புதிய நாவல் இந்த ஆண்டு வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவருடைய புதிய நாவலைக் குறித்து அதன் வெளியீட்டாளர் லண்டனில் வெள்ளிக்கிழமை (30-01-2015) தெரிவித்த விவரம்: ஏழு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சல்மான் ருஷ்டி எழுதிய புதிய புத்தகம் வெளியாகவுள்ளது. "இரு ஆண்டுகள், 8 மாதங்கள், 28 இரவுகள்" என்பது அதன் பெயர். "ஆயிரத்தொரு இரவுகளின்" மற்றொரு பெயர்தான் இது. வரலாறு, மாயாஜாலம், காலம் கடந்து நிற்கும் காதல் ஆகியவை கலந்த கதைகளின் தொகுப்பு இந்தப் புத்தகம். பகுத்தறிவற்ற இருளில் மூழ்கியுள்ள உலகில் புதிய ஒளி பாய்ச்சும் விதத்தில் இது அமையும். வரும் செப்டம்பர் மாதம் புத்தகம் வெளியாகும் என்று வெளியீட்டாளர்கள் தெரிவித்தனர். வழக்கமாகப் பெரிய நூல்களை எழுதி வந்த சல்மான் ருஷ்டி, புதிய புத்தகத்தை சுருக்கமாக சுமார் 250 பக்கங்களில் எழுதியுள்ளார். 1988 ஆம் ஆண்டு இவர் எழுதிய "சாத்தானின் கவிதைகள்" என்ற நூல் பெரும் சர்ச்சைக்குள்ளாகியது. ஈரானின் மதகுரு கோமேனி ருஷ்டிக்கு எதிராக 'பத்வா' வெளியிட்டார்.


கரைச்சி பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரத்ததான முகாம் நடைபெற்ற போது உத்தியோகத்தர்கள் இரத்த தானம் செய்வதனைக் காணலாம். (90)

# அத்தியாவசிய பொருட்களின் விலை இன்னும் குறைக்கப்படவில்லை

## - மன்னார் பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு

அரசின் புதிய இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் படி அத்தியாவசிய பொருட்கள் சில வற்றிற்கு விலைகள் குறைக்கப் பட்ட நிலையில் மன்னார் மாவட் டத்தில் உள்ள கடைகளில் இன் னமும் பொருட்களின் விலை குறைக்கப்படாமல் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சீனி,மா, மண்ணெ ன்ணெய் போன்றவற்றின் விலை குறைக்கப்பட்ட நிலையில் இங் குள்ள கடைகளில் முன்னர் விற் கப்பட்ட விலைகளிலேயே பொருட் கள் விற்பனை செய்யப்படுவ தாகவும் இதனால் தாம் அநாவ சிய சிரமங்களை எதிர்நோக்கு வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். குறித்த அத்தியாவசியப் பொருட் களுக்கே தேவை அதிகரித் துள்ள நிலையில் அரசினால் அவற்றுக்கு விலைகுறைக்கப் பட்டும் வியாபாரிகள் அதனை நடைமுறைப்படுத்தாது இருப்பது நுகர்வோரையே பாதிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பொருட்களுக் கான விலையை வியாபாரிகள் குறைக்காமல் இருப்பதால் நடுத் தர குடும்பங்கள் மற்றும், கூலி வேலை செய்து ஜீவனம் நடத் தும் குடும்பங்கள் இதனால் பாதிப்புக்களை எதிர்நோக்குவ தாகவும் இதனை கருத்தில் கொண்டு அரசின் நிர்ணய விலை யில் வியாபாரிகள் பொருட் களை விற்பனை செய்யவேண் டும். எனவும் இது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து நுகர்வோரின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# எழுத்தாளர் எஸ்.பொ.வின் நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கிய பெருமன்றத்தின் ஏற்பாட்டில் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) நினைவஞ் சலி நிகழ்வும் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் முன் னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை மக்கள் கலைஇலக்கிய பெருமன்றத்தலைவர் தேவிபரமலிங்கம் வழங்குவார். அஞ்சலி உரைகளினை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி .த.கலாமணி, சட்டத்தரணி ரெங்கன் தேவ ராசா, எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன், ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜி.ஜோர்ஜ்,எழுத்தாளர் மா.பாலசிங்கம், ச.சரத்சந்திரன். எழுத்தாளர் அ.யேசுராசா, எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார் கள். நிகழ்விற்கான நன்றியுரையினை எஸ்.பொ.வின் சகோதரன் ச.சொல்வேந்தன் வழங்குவார். (63)

# வாழ்வின் எழுச்சி சங்கங்கள் நடத்திய சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

வடமராட்சி அல்வாய் தெற்கு வாழ்வின் எழுச்சிச்சங்கங்கள் இணைந்து நடாத்திய சாதனை யாளர் கௌரவிப்பு விழா நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலை மண்ட பத்தில் கிராம உத்தியோகத்தர் தி.வரதராஜன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வடக்கு மாகாணக்கல்விய மைச்சுச் செயலாளர் எஸ். சத் தியசீலன் பிரதமவிருந்தினராக வும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ, சுந்தாபொறியியல் ஒப்பந்த நிறு வன முகாமைத்துவப்பணிப் பாளர் வி.கிருஸ்ணசிங்கம், உதவித்திட்டப்பணிப்பாளர் எஸ். சுபச்செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக பட்டம்பெற்ற 6 மாணவர்களும்,பல்கலைக்கழக அனுமதிபெற்ற 4 மாணவர்க ளும், தரம் 5 புலமைப்பரி சில பரீட்சையில் சித்தி பெற்ற 36 மாணவர்களும், சர்வ தேச புகைத்தல் எதிர்ப்புத்தி னப்போட்டியில் மாவட்ட ரீதியில் முதலாம் இடம் பெற்றவருக்கும் வாழ்வின் எழுச்சி சிறந்த உற் பத்தியாளர்கள் 6 பேருக்கும். வளர்ந்துவரும் இலக்கியப் படைப்பாளி,இளம்விவசாய முயற சியாளர், சிறந்த ஆங்கிலப்புல மையாளர், அர்ப்பணிப்பான. கூட்டுறவாளர், சிறந்த சமூக சேவையாளர் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு விருதுகளும். வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளையடுத்து எஸ்.சிவரூபன் நன்றியுரை வழங் கினார். (01)

# கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கு இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபைக்கூட்டம் இம்மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சங்க பிரதான மண்டபத்தில் ஆர்.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் 13கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர்கள் ஏற்கனவே யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தலைமையில் நடைபெற்ற கிளைக்குழுப்பொதுக்கூட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழுத்தலைவர்களின் விபரங்கள் பின்வருமாறு,

புலோலி தெற்குகிளை டாக்டர் எஸ்.திருச்செல்வநாயகம், புலோலி மேற்குகிளை என்.இராசலிங்கம், புலோலிதென் மேற்கு கிளை - எம்.ஜெகதேவன், புலோலி கிழக்கு மத்திகிளை- எஸ்.துரை. ராஜா, புலோலி வடக்குகிளை - என்.கணேசலிங்கம், புற்றளை கிளை - எஸ்.திருச்செல்வம், தம்பசிட்டி கிளை - எஸ்.சந்திரலிங்கம், குரும்பசிட்டிகிளை -கே.வேலும்மயிலும், பெரிய தேவனந்தம் கிளை - என்.சுப்பிரமணியம், வியாபாரி மூலை கிளை - கே.மோகனதாஸ், வல்லிபுரக்குறிச்சிக்கிளை - பீ.பரராசசிங்கம், அல்வாய்வடக்கு கிளை - எம்.சிவபாதம், கற்கோவளம் கிளை-என்.பாக்கியநாதன். (01)

# பதிவு நடவடிக்கை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சமூக சேவைப் பிரிவினர் அங்கவீன முற்றவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவாக 3000ஆயிரம் ரூபா வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே பதிவுக்கான திகதிகள் கிராம அலுவலர் ரீதியாக வழங் கப்பட்டுள்ளதால் கொடுப்ப னவை பெறவுள்ளோர் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)



காரைநகர் பிரதான வீதியின் புது வீதிச் சந்திக்கு அண்மையாக வீதியோரமாக நீர் தேங்கிக் காணப்படு வதுடன் குப்பைகள் தேங்கி சுகாதாரத்திற்கு சீர்கேடான முறையில் காணப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? (50)

# மறைந்த கலைஞருக்கு அனுதாபம்

எமது யாழ்ப்பாணத்தின் சிறந்த வில்லிசைக்கலைஞர் சின்னமணி க.நா.கணபதிப்பிள்ளை இறைபதம் சேர்ந்தார் என்று அறிந்தபோது மிகவும் கவலைப்பட்டோம். நல்லதொரு கலைஞரை யாழ்ப்பாணம் இழந்து விட்டது. இவருடைய வில் லிசை நயமானது சிரிப்போடு கருத்தும்நிறைந்தது. அன்னா ருடைய இழப்பு பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா நல்லைக்கந்தன் திருவடி நிழலில் அமைதியுறப் பிரார்த்திக்கின்றோம். ஆதீன முதல்வர்.



ஓங்கிஒலித்த வில்லிசை நாதம் ஓய்ந்து விட்டது. சிரித்துச் சிரித்துப்பேசி தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ வைத்த வில்லிசை வேந்தன் "சின்ன மணி" யின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். கணீரென்ற குரலினால் இரசிகர்களைக் கவர்ந்திழுத்த கலைஞன் இன்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டான்

கலகலப்புடன் கருத்தோடிணைந்த நகைச்சுவை பேசி நடித்து. வில்லிசை செய்த கலைமாமணி கலாவிநோதன் சின்னமணியின் பிரிவு எம்மால் தாங்கமுடியவில்லையே! அன்னாரின் மறைவுச் செய்தி காதுகளில் நாராசமாய்ப்பாய்ந்து அனைவரது நெஞ்சங் களிலும் ஆற்றொணாத் துயரத்தைத் தந்தது. இனி இக்கலை ஞரின் குரலை எப்போது கேட்போம்? வில்லிசையின் அடி நாதம் ஓய்ந்து மறைந்துவிட்டது. அன்னாரது மறைவு கலையுல குக்கே பெருமிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைத் துதிக் கின்றோம்.

கலாபூஷணம்- இராசையா ஸ்ரீதரன்.

# இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் தீர்க்க முடியாத பிரச்சினை அல்ல

## பாதுகாப்புத்துறை இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் காணிப்பிரச்சினைகள் தீர்க்க முடியாத பிரச்சினை அல்ல அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என பாதுகாப்புத்துறை இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்

நேற்று காலை ஒன்பது மணிக்கு விசேட உலங்குவானூர்த்தி மூலம் இரணைமடுவில் வந்திறங்கிய அமைச்சர் கிளிநொச்சி படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்கவினால் வரவேற்கப்பட்டு, இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

பின்னர் இராணுவத்தினர் மத்தியில் அமைச்சர் உரையாற்றினர். தொடர்ந்து இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள பொது மக்களின் காணிகள் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரினால் குழு ஒன்று அமைக்கப்பட்டு இந்த காணிப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு வருகின்றன. எனவே விரைவில் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும். தமிழ் மக்கள் ஜனாதிபதியின் மீது அதிக நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர். அவர்களின் நம்பிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொளளப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். (29)

# செல்லத்துரை புலவரின் உருவச்சிலை திறப்பு

முல்லைத்தீவு முதுபெரும் இலக்கியவாதியான அமரர் அதியான் பொய்கை கே.செல்லத்துரை புலவரின் உருவச்சிலை திறப்புவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

கலை, இலக்கியம், நாட்டுக்கூத்து, நாடகம் சைவப் பாடல்கள் சமூகப் பணிகள் என பல்வேறு துறைகளிலும், சிறந்துவிளங்கிய அரியாம் பொய்கை செல்லத்துரைப் புலவரின் நினைவாக முள்ளியவளை அம்மன் சந்தியில் அமைக்கப்பட்ட உருவச்சிலையை பிரதம அதிதியாக கலந்து கொண்ட முல்லை மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் திறந்து வைத்தார்.

கவி சேகரன் கலாபூஷணம், தமிழ்மணி, பௌரணக்கலாநிதி, ஆளுநர் விருது, உள்ளிட்ட பல பட்டங்களைப் பெற்ற இவரின் கலைஇலக்கிய சமய சேவையினைப் பாராட்டி அவரின் ஞாபகார்த்தமாக இச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிலம்பு கூறல் காவியம் எனும் புத்தகமொன்றும் நிகழ்வு தினத்தில் வெளியிட்டு வைக்கப்படடன.

# க.பொ.த. (உ/த) பரீட்சை விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தினால் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு (2015) தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்பவேண்டும் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பினால் சகல விண்ணபப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் சரியான முறையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ. 1503 கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச கண்வில்லைகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவினூடாக முதியோர் செயலகத்தினால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 60 வயதிற்கு மேற்பட்ட 5 முதியவர்களுக்கு கண்வில்லைகள் இலவசமாக வழங்கப்பட்வுள்ளன.

இதன்படி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள எஸ்.கார்த்திகேசு, ரி.தவமணி, ஆர் நாகம்மா, கே. பொன்னுச்சாமி, ஆர். தம்பிநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பயனாளிகளை சமூகசேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (18)



காரைநகர் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தால் காரைநகர் துறைமுகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தைப்பூசத்தன்று நடைபெற்றபோது.. (50)

# பதிவிறக்கப் பெட்டகம்

**நோயாளி:** கனவிலே எப்ப பாத்தாலும் டொக்டர் வருகிறார் மிஸ்.
**நேர்ஸ்:** அதுக்கென்ன இப்போ?
**நோயாளி:** இல்ல... நீங்க வந்தால் நல்லாயிருக்கும்.

*** *** *** ***

"டொக்டர் என் அம்மாவுக்கு இப்போ உடல்நிலை எப்படி இருக்கு?"
"மெகா சீரியல் மாதிரி"
"என்ன டொக்டர் சொல்றீங்கள்?"
"இழுத்துக்கொண்டே இருக்கு!"

*** *** *** ***

**டொக்டர்:** டிவி அதிகமாகப் பார்ப்பீங்களா?
**நோயாளி:** இல்ல டொக்டர் ஒரே ஒரு டிவியைத்தான் பார்த்துக் கொண்டே இருப்பேன்.

** *** *** ***

"ஒரு பல் ஆடுது டொக்டர்..."
"ஏன் ஆடுது?"
"தெரியேல்ல டொக்டர்.... அதுபாட்டுக்கு ஆடுது!"
"சினிமா பாட்டுக்கா... பக்திப் பாட்டுக்கா..?"

*** *** *** ***

"அந்த டொக்டர் எவ்வளவோ மயக்க மருந்து கொடுத்தும், எனக்கு மயக்கமே வரேல்ல!"
"பிறகு எப்பிடி மயக்கமடைய வைச்சினம்?"
"நேர்ஸ் வந்து பில்லை சொல்லித்தான்"

*** *** *** ***

"டொக்டர்! எனக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கு... அத்தோட...."
"அத்தோட எல்லாம் இருக்கட்டும். முதல்ல ஃபீஸை குடுத்துட்டு மிச்சத்த சொல்லுங்க"

*** *** *** ***

"அவர் போலி டொக்டர் என்று எப்படி சொல்றாய்?"
"மிச்சக்காசு இல்லை அதுக்கு பதிலா ஒரு ஊசி போடவா என்று கேக்கிறார்!"

*** *** *** ***

"டொக்டர் ஒரு சாப்பாட்டு ராமர்"
"எப்படிச் சொல்றாய்?"
"இங்கு அறுசுவையிலும் மாத்திரைகள் கிடைக்கும் என்று அறிவிப்பு வைச்சிருக்கிறாரே!"

*** *** *** ***

"என்னது அந்த டொக்டர், கோவிந்தன், எம்.பி.பி.எஸ்., கும்ப ராசி–என்று போர்ட் எழுதி வச்சிருக்கிறார்?"
"அவர் ராசியில்லாத டொக்டர் என்று யாரும் சொல்லக் கூடாதாம்..!"

*** *** *** ***

"என்ன டொக்டர் மருந்துச்சீட்டில் "கார் வாங்கவும்' என்று எழுதியிருக்கிறீங்கள்?"
"நடந்தால் கால் வலிக்குது என்று நீங்கள்தானே சொன்னீங்கள்"

*** *** *** ***

"சந்தேகம் என்கிறது பெரிய வியாதி"
"அது சரி டொக்டர், அதுக்குக் கூட ஒப்பரேஷன் செய்யவேணும என்று சொல்றீங்களே, அதுதான் விளங்கேல்ல"

*** *** *** ***

"டொக்டர், பஸ்ஸில ஏறி இருந்த உடனேயே தூக்கம் வந்திடுது..."
"அதில ஒண்ணும் தப்பில்லையே... தூங்குங்களேன்..."
"நான் தூங்கியிட்டால் அப்புறம் பஸ்சை யார் ஓட்டுறது டொக்டர்?"

*** *** *** ***

"நான் பல்லைப் பிடுங்கும்போது வலியே இருக்காது தெரியுமா?"
"ஆனால், நீங்கள் அதுக்கான ஃபீஸை சொல்லும்போது நெஞ்சுவலியே வந்திடும் என்று பலரும் கதைக்கிறாங்களே டொக்டர்"

*** *** *** ***

"என்ன டொக்டர், ஹார்ட் ஒப்பரேஷனுக்கு கோடாரி, அலவாங்கு எல்லாம் கொண்டு வந்திருக்கிறீங்கள்"
"நீங்க கல் நெஞ்சக்காரர் என்று சொன்னாங்கள் அதுதான்"

*** *** *** ***

**டொக்டர்:** ஒப்பரேஷன் செய்த இடத்தில வலி, கிலி இருக்கா?
**நோயாளி:** வலி இல்லை டொக்டர். ஆனால் கிலி இன்னும் போகேல்லை.

*** *** *** ***

"டொக்டர், போனகிழமை வயித்து வலி என்று வந்தேன்... அதை உடனே நிறுத்தினீங்கள்... இப்போ மூச்சு விட முடியேல்லையே டொக்டர்..."
"அதுக்கென்ன, அதையும் நிறுத்திவிடுவோம்..."

# கிழக்குமாகாண முதல்வர் விவகாரம் கட்சிக்குள் பிளவு தோன்றும் அபாயம்

## திணறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரத்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிளவு நிலை ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டை மு.கா. தலைமை எடுத்தபோதிலும், முதல்வர் விவகாரம் தொடர்பான தலைமையின் முடிவு மு.கா. உறுப்பினர்கள் சிலருக்கு அதிருபதியை ஏற்படுத்தியது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு வழங்க கட்சித் தலைவர் ஹக்கீம் தீர்மானித்ததையடுத்தே இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு முதலமைச்சுப் பதவியை வழங்க கட்சியின் தலைமை தீர்மானித்ததையடுத்து, மு.கா.வின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், குழுக்களின் தலைவருமான எம்.ஏ.ஜெமீல் தனது மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை மு.கா.தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கையளிக்க முயன்றபோதிலும் அவர் அதை நிராகரித்ததையடுத்து, இராஜாங்க அமைச்சரும் கட்சியின செயலாளருமான ரி.எம்.ஹசன் அலியிடம் அதனைக் கையளித்துள்ளார். இதையடுத்து, ஜெமீல் உள்ளிட்ட அதிருப்தித் தரப்பினரை சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் 75 சதவீத மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களித்து வருகின்றனர்.

இருப்பினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அம்பாறை மாவட்டத்தைத் தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது. முதலமைச்சுப் பதவியை அம்பாறை மாவட்டத்துக்குக் கொடுத்தால் தனது தலைமைப் பதவி பறிபோகும் நிலைமை ஏற்படும் என்பதனாலேயே மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அதை மு.கா. தலைவர் ஹக்கீம் வழங்கினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் கடந்த காலங்களில் தலைமைக்கு எதிராக செயற்பட்டு வந்தார். அதனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவை எதிர்த்து வாக்களிக்க அவர் செல்லவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத்தை கட்சியிலிருந்து ஓரங்கட்டுவதற்காகவே முதலமைச்சர் பதவியை ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# போலி ஆவணங்களுடன் வங்கிக்கணக்கு இலங்கை வங்கியில் ஆரம்பித்தது யார்?

## ஷிராந்தி மீது குவிகிறது கவனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ நடாத்தி வரும் சிறிலிய சவிய என்ற அரச சார்பற்ற நிறுவனம் இலங்கை வங்கியின் சுதுவெல்ல கிளையில் வைத்திருக்கும் 143100146235069 என்ற இலக்கங்களை கொண்ட வங்கிக்கணக்கை ஆரம் பிக்க போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ள தாக தெரியவந்துள்ளது.

இந்த வங்கிக்கணக்கில் இருந்து பணத்தை எடுக்கும் அதிகாரம், எஸ். ராஜபகஷ, ஏ.எம்.ஜே.ஏ. குமாரி, கே.கே.திஸாநாயக்க ஆகியோருக்கே வழங்கப்பட்டுள்ளது.

இதில் எஸ்.ராஜபக்ஷ என்பவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஆவார். அவரது தேசிய அடையாள அட்டை எண் 222222222V என குறிப்பிடப்பட்டுள்ளது.

குமாரி என்ற பெண்ணின் தேசிய அடையாள அட்டை எண் 111111111V என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கே.கே.திஸாநாயக்க என்பவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 587060958V எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே.கே.திஸாநாயக்க என்பவரின் பெயரில் அதே வங்கியில் வேறு கணக்கு இருப்பதுடன் அதற்கு வேறு ஒரு தேசிய அடை யாள அட்டை இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

சிறிலிய சவிய என்ற அரசசார்பற்ற நிறுவனத்திற்குரிய வங்கிக்கணக்கில் 43.2 மில்லியன் ரூபா இருப்பில் உள்ளது. அந்த அமைப்பின் விலாசம் கால்டன் பங்களா தங்காலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற அரசசார்பற்ற நிறுவனத்திற்கு வெளிநாட்டில் இருந்து பல கோடி ரூபா சுனாமி நிதியுதவி கிடைத்திருந்தது.

அந்தப் பணத்தை மோசடி செய்ததாக மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சிறிலிய சவிய என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் வங்கிக்கணக்கு போலியான தகவல்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவது பாரதூரமான விடயம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# “ஈரோஸ்” தலைவர் எங்கே? பசீர் சேகுதாவூத் எம்.பி.கேள்வி

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

வட, கிழக்கில் காணாமற்போன அனைவரையும் தேடித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து வெளிவந்த பல்வேறு தகவல்களுடன், வடக்கில் கைதானபலர் இரகசிய முகாம்களில் இருப்பதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் இந்த விடயங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக பசீர் சேகுதாவூத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 2009 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஈரோஸ் அமைப்பின் பொதுக் குழுத் தலைவரும், ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைவருமான வே.பாலகுமார் மற்றும் அவரது மகன் சூரியதீபன் ஆகியோரைக் கண்டுபிடிப்பதில் நேரடியாக தலையிடுமாறு அவர் கோரியுள்ளார்.

வே.பாலகுமாரன் அமைப்புச் சார்ந்த செயற்பாட்டாளர் அல்ல எனவும், அவரது மகன் எந்தத் தருணத்திலும் ஆயுதமேந்தி போராடவில்லை எனவும்,



வன்னியில் தொலைத்தொடர்பு நிலையமொன்றில் பணியாற்றியவர் எனவும் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நேரடி கண்காணிப்பு, கரிசனையூடாக குறித்த இருவரையும் கண்டுபிடித்துத் தருமாறும் பசீர் சேகுதாவூத் தமது கடிதத்தின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# கலைஞர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்க வழி பிறக்குமா?

கலைகள் மனிதர்களை பரவசமடையச் செய்வதுடன் நொந்து கெட்ட மனங்களுக்கு மருந்தாகவுமுள்ளன. இத்தகைய கலைகள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இறைவனின் அருட் கொடையாக சிலருக்கு மட்டுமே இது கிடைப்பதாகவே கருதப்படுகிறது. இந்த வகையில் ஏதாவதொரு கலையில் தேர்ச்சியடைந்தவர்களையே கலைஞர்களென்று கருதுகிறோம்.

கலைஞர்கள் முற்காலத்திலிருந்தே வறுமை நிலையில் வாழ்ந்து வந்துள்ளதை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. இதனைக் கண்ட அன்றைய அரசர்கள் கலைஞர்களுக்கு பொன்னையும் பொருட்களையும் வாரி வழங்கி வறுமை நிலையைப் போக்கினார்கள். இச் செயற்பாடுதான் அக்காலத்தில் நூற்றுக் கணக்கான புராண இதிகாசங்களைப் படைப்பதற்கு வழிவகுத்தது.

ஆனால் இன்றோ அப்படியானதொரு நிலைப் பாடில்லை. கடந்த கால ஆட்சியினர் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென பல தடவைகள் தீர்மானம் எடுத்தார்கள். ஆனால் செயலளவில் ஒன்றுமே நடக்கவில்லை.

ஆண்டு தோறும் அறுபது வயதையடைந்த சில கலைஞர்களுக்கு 'கலாபூஷணம்' என்ற அரச் விருது வழங்கப்படுவதை விட வேறு எவ்விதமான வாழ்வாதார உதவிகளும் அவர்களுக்கு கிடைப்பதில்லை.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு வறுமையை ஒழிக்கும் நோக்கில் நூறு நாள் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் வேளையில் கலைக்காக தம் வாழ்க்கையையே அர்ப்பணிக்கும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் என்ற ரீதியிலாவது சொற்ப உதவி கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் வழி வகுப்பார்களா?

கலைஞர்கள் சார்பாக,
சி.காசிப்பிள்ளை.
கொடிகாமம்.

# புதிய மைத்திரி - ரணில் அரசு வடமாகாணத்தை கவனிக்குமா?

## கடந்த காலத்தில் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் ஏதேனுமொரு வகையில் முன்னேறவேண்டும் என்பதனையே இலக்காகக் கொண்டுள்ளான்.

இந்த இலக்கு என்பதை அடைவதற்காக கல்வியைப் பெறுகின்றான். பல்கலைக்கழகம் செல்கின்றான். பட்டம் பெற்று வெளியேறுகின்றான். இவ்வாறாக பல நிலைகளுக்கு ஊடாக பல்வேறு கஷ்டங்கள், துன்பங்கள். துயரங்களுக்கு மத்தியில் வெளியேறும் பட்டதாரி உரிய வேலை வாய்ப்பை அடையமுடியாது துன்பப்படுகின்றான்.

இன்று வடமாகாணத்தை எடுத்துக்கொண்டால் 1400 இற்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலையற்று வறுமையில் வீதிக்கு வந்துவிட்டதாக தெரியவருகிறது.

இதில் பல்கலைக்கழகங்களிலும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மூன்று வருடங்கள், நான்கு வருடங்கள் கல்வியைத் தொடர்ந்தபட்டதாரிகளே வேலையற்ற நிலையில் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 1999, 2005, 2011 ஆகிய மூன்று ஆண்டுகளில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு ஒவ்வொருவரினதும் வாழ்வில் ஏதோ ஒரு வகையில் சுபீட்சம் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று நல்லாட்சிக்கான புதிய அரசு தோற்றம் பெற்றுள்ளது. கடந்த காலத்தில் அரசியல் பழிவாங்கலில் (political revenge) பதவிகள் நீக்கப்பட்டவர்களுக்கும். பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக 100 நாள் வேலைத்திட்டத்தில் இவையாவும் வடக்கில் இருந்து தகவல்கள் பெறப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான விடயங்களில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினா ஆகியோரது முன்னெடுப்புக்கள் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு நல்லாட்சி தத்துவங்கள் இடம்பெறுகின்றன.

இதன் மூலம் கடந்த கால அரசியல் பழிவாங்கல்களில் பதவியை இழந்தவர்கள் மேலெழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்றே வேலையை இழந்தவர்களுக்கும், பதவிகள் இறக்கப்பட்டவர்களுக்கும் பதவி இரத்து செய்யப் பட்டவர்களுக்கும் (post revoke) அவரவர் நிலையில் மீள் பதவிகள் வழங்கப்பட்டு நல் லாட்சி செய்யப்படுகின்றது.

அதே போன்று வேலையற்ற பட்டதாரிகளுக்கும் புதிய வேலைவாய்ப்பை பொருத்தமான துறைகளில் வழங்கி ஒவ்வோர் வாழ்விலும் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதேநேரம் ஜீ.சீ.ஈ.சாதாரணம், உயர்தரம் கற்றுத்தேறியவர்களுக்கும் பொருத்தமான வாழ்வாதாரத்தை வழங்க புதிய மைத்திரி, ரணில் அரசு கை கொடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இரா.ரிஷாந்
பதவி இரத்துச் செய்யப்பட்டு
பாதிக்கப்பட்டவர்.
வடமாகாணம்.

(11) எனக்கு சிறகு முளைத்தால் என்ற தலைப்பில் பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. ........................................
2. ........................................
3. ........................................

(12) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

அடம்பன் கொடி என்பது மிகவும் மிருதுவான கொடியான பூண்டு வகையைச் சார்ந்தது. அதை வெடுக்கென இலகுவாய் அறுத்துவிடலாம். ஆனால் அக்கொடிகள் பல சேர்ந்து இணைத்திருந்தால் அவற்றை அறுப்பது என்பது மிக மிக சிரமம். எளிதில் அறுபடாது. அதுபோல்தான் மனிதரிலும் ஒற்றுமை உடையோரை பிறர் வெல்வது கடினம். ஆனால் ஒரு தனி மனிதனை வெல்வது எளிது. ஆனால் அவனோ சக கூட்டாளிகளுடன் இணைத்திருந்தால் அவனை வெல்வது இயலாத காரியம்

1. பின்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களை எழுதுக?
   1) கடினம் ........................ 2) ஒற்றுமை ........................
2. பந்தியில் முதலாவது வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழியைக் குறிப்பிடுக? ........................
3. சிரமம் எனும் சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை தருக? ........................
4. ஒற்றுமையே பலம் என்பதை விளக்கும் பழமொழியைக் குறிப்பிடுக? ........................
5. இணைந்திருந்தால் எனும் சொல்லை பிரித்தெழுதுக? ........................
6. சார்ந்தது எனும் சொல் எக்காலத்தைக் குறிக்கின்றது? ........................

(13) கூண்டுக்குள் உள்ள சொற்களை வைத்து வினாக்களுக்கு விடை தருக

| சிரிக்கின்றாய், பறக்கின்றன, வந்தார்கள், படிப்பார்கள், சென்றன |
|---|

1. அஃறிணை , பன்மை, இறந்தகால வினைச்சொல் ........................
2. உயர்திணை, ஒருமை, முன்னிலை, வினைச்சொல் ........................
3. அஃறிணை, பன்மை, நிகழ்கால வினைச்சொல் ........................
4. உயர்திணை, பன்மை, இறந்தகால, வினைச்சொல் ........................
5. உயர்திணை, பன்மை, எதிர்கால வினைச்சொல் ........................

(14) பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக

1. நேற்று நீ எங்கு போனாய்
2. இலங்கையின் ஆறு குளம் ஏரி என பல அழகிய நீர் நிலைகள் உள்ளன

(15) பின்வரும் வாக்கியங்கள் இலக்கணரீதியில் அமைந்திருப்பின் (சரி) எனவும் அவ்வாறு இல்லை எனின் (பிழை) எனவும் எழுதுக

1. மயில் கூட்டம் சோலையில் உலாவித்திரிந்தன ( )
2. பலத்தகாற்று வேகமாக வீச மரங்கள் சரிந்து விழுந்தன ( )

(16) பின்வரும் தொடர்களின் கருத்தினை தருக

1. அலைக்கழித்தல் ........................ 2. முகம் சுழித்தல் ........................

(17) இடைவெளி நிரப்புக

1. கோழியின் பெண் பேடு என்பது போல ஆண் ........................ ஆகும்
2. குதிரையின் ஆண் குண்டு என்பது போல பெண் ........................ ஆகும்

(18) கருத்தினை தமிழில் தருக

1. I am writting ........................ 2. I go to school ........................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக

(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

கடலினுள்ளே புவி நடுக்கம் ஏற்படும் போது சுனாமி அலை உருவாகின்றது. இது கடலை அண்டிய பிரதேசங்களில் மிக உயரத்திற்கு மேலெழுந்து கரையோரப் பகுதியை முழுமையாக தாக்கியழிக்கும். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையை சுனாமி அலை தாக்கி பாரிய சேதத்தை ஏற்படுத்தியது. சுனாமி என்ற சொற்பதம் ஜப்பானிய மொழியில் இருந்து வந்ததாகும். சுனாமி இலங்கையின் கரையோரப்பகுதிகளான காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைத் தாக்கி பெரும் அழிவை ஏற்படுத்தியது.

1. சுனாமி என்ற சொற்பதம் எந்நாட்டு மொழிக்குரியது? ........................
2. இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இரண்டு தருக? ........................
3. கடல் எனும் சொல்லுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக? ........................
4. கரையோரம் எனும் சொல்லை பிரித்தெழுதுக? ........................
5. அஃறிணை, படர்க்கை, நிகழ்கால ஒருமை வினைச்சொல்லை எழுதுக? ........................
6. சுனாமி ஏற்படக்காரணம் யாது? ........................

(02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

1. இந்தியாவாகும் / நாடு / அருகிலுள்ள / எமது / மிக / நாட்டிற்கு
   ........................
2. வானவில்லின் / சூரியகதிர்களில் / காணமுடியும் / இருந்து / நிறங்களை
   ........................

(03) பின்வரும் பழமொழிகளினது முடிவினை எழுதிக்காட்டுக

1. ஆனைக்கு ஒரு காலம் ........................
2. கண்டது கற்கப் ........................
3. குப்பையில் கிடந்தாலும் ........................
4. அரசன் எவ்வழி ........................

(04) சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

01) 1. ஆட்பதிவு　2. ஆல்பதிவு　3. ஆற்பதிவு　4. ஆள்பதிவு
02) 1. ஆலமரம்　2. ஆழமரம்　3. ஆளமரம்　4. ஆலமறம்
03) 1. காருன்யம்　2. காருண்யம்　3. காறூன்யம்　4. கருணியம்

(05) கருத்தினை தமிழில் தருக.

1. Radio ........................ 2. Gate ........................
3. Morning ........................ 4. Sun ........................

(06) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

1. கடிகாரம் ........................ 2. மலர் ........................


3. மின்குமிழ் ........................................ 4. மரம் ........................................

**(07) சிங்களச் சொல்லுக்கான கருத்தினை தமிழில் தருக**


1. தாத்தா வெட (ட்) கியா ........................................
2. மல்லி துவனவா ........................................

**(08) சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. பாக்கு பரவலடைவதற்கு காரணம்
   1) வெடித்தல் 2) நீர் 3) விலங்கு 4) காற்று
2. அதிகளவு மாப்பொருள் கொண்ட உணவுப்பொருள்
   1) வாழைப்பழம் 2) தேங்காய் 3) கோதுமை 4) ஈச்சம்பழம்
3. கொத்தாகப்பூக்கும் பூவினம்
   1) சூரியகாந்தி 2) கொன்றை 3) மல்லிகை 4) கோப்பி
4. பின்வரும் மின்சுற்றுக்களில் ஒளிராத மின்சுற்று




5. உலகிலே மிகவும் ஆழமான சமுத்திரம்
   1) இந்து சமுத்திரம் 2) பசுபிக் சமுத்திரம்
   3) அந்தாட்டிக் சமுத்திரம் 4) ஆட்டிக் சமுத்திரம்
6. பின்வருவனவற்றுள் மீன்பிடி உபகரணம் எது?
   1) அத்தாங்கு 2) நீரம்பி 3) செக்கு 4) கடற்பாறை
7. இலங்கையானது எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது
   1) 10 2) 25 3) 09 4) 12
8. உடற்பயிற்சியோடு மனதிற்கும் வலிமைகிடைக்கும் செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?
   1) தியானப்பயிற்சி 2) சூரியநமஸ்காரம் 3) சதுரங்கம் 4) நோன்புபிடித்தல்
9. பின்வரும் பிராணிகளிடையே அதிகளவு மோப்ப சக்தி உடையது
   1) பூனை 2) நாய் 3) எலி 4) ஆமை
10. பின்வரும் இடங்களில் அமைதியைப் பேணவேண்டிய இடம் எது?
   1) பாடசாலை 2) சந்தை 3) மைதானம் 4) நூலகம்
11. சிகிரியச் சித்திரங்களை நிர்மாணிப்பதற்கு காரணமான அரசன்
   1) பண்டுகாபயன் 2) தாதுசேனன் 3) காசியப்பன் 4) எல்லாளன்
12. இலங்கை நாட்டிற்குரிய நாணய அலகு எது?
   1) பைசா 2) சல்லி 3) ரூபாய் 4) யென்
13. A - 9 பாதையைக் குறிப்பது
   1) கண்டி - யாழ்ப்பாணம் 2) கொழும்பு - யாழ்ப்பாணம்
   3) கொழும்பு - கண்டி 4) கண்டி - மாத்தறை
14. படத்தின் படி B பகுதி குறிப்பது
   1) பெண்ணகம் 2) ஆணகம்
   3) சூலி 4) புல்லி





15. குக்கத்தை பிரதிபலிக்கும் நிறம்
   1) வெள்ளை 2) கறுப்பு 3) சிவப்பு 4) பச்சை
16.  உருவில் காட்டப்பட்டிருப்பவர்
   1) C.W.W கன்னங்கரா 2) ஆனந்தசமரக்கோன்
   3) ஹென்றி ஒல்கோட் 4) அமரதேவா





17. வீட்டுத்தோட்டத்தில் இயற்கையாக வளர்ந்து பெருகக்கூடியது
   1) துத்திரி 2) வல்லாரை 3) நொச்சி 4) எக்கேசியா
18. பின்வருவனவற்றுள் நீரில் வளராத தாவரம்
   1) அல்லி 2) குளவாழை 3) ஐதரில்லா 4) லில்லி
19. உப்பிட்டுக்கழுவக்கூடியது எது?
   1) மீன் 2) பழங்கள் 3) கீரைவகை 4) தானியம்
20. பின்வருவனவற்றில் புத்தளிப்புக்கருவி எது?
   1) சல்வாரி 2) ரபான் 3) வீணை 4) மேளம்

**(09) பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களைக் குறிப்பிடுக**






**(10) வினாக்களுக்கு விடை தருக**

1.  1) இத்திண்ம பொருளுக்கு இருக்கக்கூடிய உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..........
   2) ஓரங்களின் எண்ணிக்கை யாது? ..........
2. அடுத்துவரும் உரோமன் எண்குறிகளைக் குறிப்பிடுக V, X, XV, XX
3. ஒரு பெட்டியில் 78 முட்டைகள் இருந்தன. அவ்வாறான 10 பெட்டிகளில் இருக்கக்கூடிய முட்டைகளின் எண்ணிக்கை யாது? ..........
4. 2.30 ரூபாவை ஐந்து தாள் காசுகளில் வழங்கக்கூடிய முறையினைக் குறிப்பிடுக
   100 ரூபா .......... 50 ரூபா .......... 20 ரூபா ..........
   10 ரூபா ..........
5. 3kg 500g இல் எத்தனை 500g பொதிகளை உருவாக்கலாம்? ..........
6. நிசானின் நிறை 22kg 500g ஆகும். இந்நிறையின் இரண்டு மடங்கு அவனுடைய தந்தையின் நிறையாகுமெனின் தந்தையின் நிறை யாது? ..........
7. 1l கட்டிப்பாலிற்கு 750ml நீர் சேர்க்கப்படுகிறது. எனின் 2l கட்டிப்பாலுக்கு சேர்க்கப்பட வேண்டிய நீரின் அளவு யாது? ..........
8. உருவிற்கு பொருத்தமான சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக




9. 2402 இவ்வெண்ணை எழுத்தில் எழுதிக்காட்டுக ..........
10. 9909 இவ்வெண்ணிற்கு அடுத்த ஒன்றினால் கூடி வரும் எண் யாது? ..........
11. 2m 85cm நாடாவில் இருந்து ஒவ்வொன்றும் 95cm நீளமுள்ள எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்க முடியும்? ..........
12. 327 மிட்டாய்களை 3 பேருக்கு பகிர்ந்து கொடுக்கும் போது ஒருவர் பெறும் மிட்டாய்களின் எண்ணிக்கை யாது? ..........
13. உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..........



14. 

O வில் இருந்து A வரையான தூரம் எத்தனை சென்ரிமீற்றர் ஆகும்? ..........

15. 

அம்புக்குறி காட்டப்பட்டுள்ள இடத்தின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர் ஆகும்? ..........

# கிழக்கு மாகாண ஆட்சி
# கிளம்புகிறது கடும் கண்டனம்



கடந்த 2012 ஆம் ஆண்டு நடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைக்கு முரணாகவே மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை அமைத்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் புதிய ஆட்சியமைப்பு நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட மக்களின் ஆணைக்கும் முரணானது என்றும் சம்பந்தன் பிபிசியிடம் கூறினார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது, அரசாங்கக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிட்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரம் செய்திருந்ததையும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் அரசாங்கக் கூட்டணியிலிருந்து வெளியேறியிருந்த முஸ்லிம் காங்கிரஸ், எதிரணியின் வேட்பாளரையே ஆதரித்தது என்றும் அவர் கூறினார்.

இந்த சூழ்நிலையில், மீண்டும் அரசாங்கக் கூட்டணியுடன் சேர்ந்து கிழக்கில் ஆட்சியமைத்துள்ளதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் ஆணைக்கு முரணாக செயற்படுகின்றது என்றார் சம்பந்தர்.

அரசாங்கக் கூட்டணியிலும் பார்க்க 6 ஆயிரத்து 100 வாக்குகளையே குறைவாகப் பெற்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களை வென்றிருந்ததாகக் கூறிய சம்பந்தன், தங்களை விட 61 ஆயிரம் வாக்குகள் குறைவாகப் பெற்றிருந்த முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையே வென்றிருந்தது என்றும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3 மாவட்டங்களில் 2 மாவட்டங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே முதலிடத்தைக் கைப்பற்றியிருந்ததாகவும் அக்கட்சியின் தலைவர் கூறினார்.

எந்தவொரு மாவட்டத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் முதலிடத்தைக் கைப்பற்றியிருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# குழந்தைகளுக்கு நினைவுச் சின்னம்
## மக்கள் வங்கியின் முன்மாதிரி

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தின வாரத்தில் பிறந்த குழந்தைகளுக்கான நினைவுச்சின்னங்களை மக்கள் வங்கி வழங்கியது.

கடந்த பல வருடங்களாக மக்கள் வங்கி நடைமுறைப்படுத்தி வரும் சுதந்திர தின நிகழ்வில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை பிறந்த குழந்தைகளுக்கு 500 ரூபா பெறுமதியான 'இசுரு உதான' பரிசு பற்றுச்சீட்டை இம்முறையும் வழங்கியது.

அண்மையில் உள்ள மக்கள் வங்கி கிளையில் அந்த பரிசு பற்றுச்சீட்டை கையளிப்பதனூடாக குழந்தைக்கு இசுரு உதான கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும்.

இப்பரிசு பற்றுச்சீட்டை கையளிக்கும் பிரதான நிகழ்வு அண்மையில் பொரல்ல காசல் வீதியில் அமைந்துள்ள மகளீர் மருத்துவமனையில் நடைபெற்றது. மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி என். வசந்த குமார் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

# மான நஷ்ட வழக்கை
# எதிர்கொள்ளும் அரியம் எம்.பி

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பி. அரியநேத்திரனிடம் இருந்து 50 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி சட்டத்தரணியினூடாக கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளதாக முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் தெரிவித்தார.

சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


எமது அரசாங்கத்துடன் இணைந்தால் 50 கோடி ரூபா தருவதாக நான் கூறியதாக, அரிய நேத்திரன் எம்.பி. ஊடகங்ளுக்கு தெரிவித்துள்ளார். இவருடன் நான் ஒருபோதும் பேசியது கிடையாது.

ஆனால் நாடாளுமன்றத்தில் நேரில் கண்டபோது சிரித்திருக்கிறேன். எனக்கெதிராக பொய்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

என்னைக் கைது செய்வதற்காகவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அண்மையில் திஸ்ஸ அத்தநாய க்கவையும் இவ்வாறு கைது செய்தனர். ஒரு வருடத்துக்கு முன்னர் தாம் கண்ட கனவைத் தான் அவர் இப்படி கூறியிருக்கிறார் என்றார்.

இதனை சபாநாயகரின் கவனத்திற் கொண்டு வருவதாக குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

# மேர்வின் மீது
# முறைப்பாடு பதிவு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சிசிர ஜெயக்கொடி, நேற்று முன்னாள் பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக நேற்று இலஞ்ச ஊழல்கள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பல்வேறு ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பிபிதென கௌனிய என்ற அபிவிருத்தி திட்டத்தின் போது பெருந்தொகைப் பணத்தை துஷ்பிரயோகம் செய்தார் என்ற அடிப்படையிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதன்போது மேவின் சில்வா, 15 மில்லியன் ரூபாய்களை பெற்றுக்கொண்டதாக சிசிர தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர கிரிபத்கொட சுகத வெலந்த சன்கமய என்ற திட்டத்துக்கும் 2 இலட்சம் ரூபாவை முன்னாள் அமைச்சர் பெற்றுக்கொண்டதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

# திருட்டுத்தனமாக முதல்வர் தெரிவு
# ஹக்கீம் மீது குற்றச்சாட்டு

"திருட்டுத்தனமாக கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் தெரிவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருடன் கலந்துரையாடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்த விடயம் தொடர்பில் எமது கட்சியுடன் எவ்வித கருத்துப் பரிமாறல்களையும் செய்யவில்லை. - இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கை பரப்புச் செயலாளரும். கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளருமான எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய அரசில் எமது கட்சி பங்காளியாகவுள்ளது. அதேபோல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதே ஆட்சியில் இருக்கின்றது. அதேபோல் கிழக்கு மாகாண சபையிலும் இரு கட்சிகளும் மிகவும் நெருக்கமாக இருந்து செயற்படட்டு வருகின்ற நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனுடன் எவ்வித பேச்சுகளையும் நடத்தாது எமது கட்சி மாகாண சபை உறுப்பினர்களை வரவழைத்து கையொப பமிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கோரியது.

கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருந்து வந்துள்ளது. அந்த முதலமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைவர் உள்ளிட்ட நாங்கள் ஆர்வமாக இருந்து வந்துள்ளோம்.

ஆனால், இந்த முதலமைச்சர் தெரிவு தொடர்பில் திருட்டுத்தனமாக எவருக்கும் அறிவிக்கப்படாமல் பெயர் குறிப்பிட்டு அவருக்கு ஆதரவாக எமது கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் இணக்கப்பாட்டுடன் தான் இந்த முதலமைச்சர் தெரிவு செய்யப்படுகின்றார் என்று கூறி எம்மை அழைத்து கையொப்பம் இடுமாறு கூறப்பட்டது.

ஆனால், இது தொடர்பில் எமது தலைவருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்ட நான் இவ்வாறான பிழையான அணுகுமுறை தொடர்பில் எனது அதிருப்தியை வெளியிட்டதுடன் தலைமைத்துவத்தின் அனுமதியின்றி கையொப்பம் இடமுடியாது என்பதை தெரிவித்ததுடன் எமது கட்சியின் தலைவருக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளேன் என்றுள்ளது.

# எந்தநேரமும் கைதாகலாம் விமலின் மனைவி சஷி

அரசியல்வாதிகளான விமல்வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ, துமிந்த சில்வா ஆகியோரை விரைவில் பொலிஸார் கைது செய்து விசாரிப்பர் என எதிர்பார்க்கப்டுகின்றது. எதிர்காலத்தில் அரசியலுடன் தொடர்புபட்ட இரு பிரபலங்கள் கைது செய்யப்படுவர் என அதன் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். ஆனால் எப்போது கைது செய்யப்படுவர் என விவரம் எதுவும் தெரிவிக்கவில்லை. போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் துமிந்தவுக்கு தொடர்பு இருக்கிறது என சந்தேகப்படுகின்றது. இது தொடர்பாக 50 வீதமான விசாரணையை சி.ஐ.டியினர் முடித்து விட்டனர் என்றார் ரோஹண. இதேபோன்று வெவ்வேறு பெயர்களில் இரண்டு கடவுச் சீட்டுக்களைப் பெற்றமைக்காக வீரவன்ஸவின் மனைவி சஷி கைது செய்யப்படுவார் எனத் தெரிகிறது. இருவரும் வரும் வாரத்தில் கைது செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கடவுச்சீட்டை முடக்க மனு
# மொஹான் பீரிஸ் விவகாரம் சூடு

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இலஞ்ச குற்றச்சாட்டு தொடர்பிலான விடயங்களைத் தெளிவூட்டுவதறகு மூன்று தினங்களை வழங்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பான விடயங்களை தெளிவூட்டுவதற்காக பெப்ரவரி மாதம் 6 ஆம 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகள் முறைப்பாட்டாளர்களால் பிரேரிக்கப்பட்டிருந்தன.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், சட்டமா அதிபராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் 619 மில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு இல்லாது போயுள்ளதாக சட்டத்தரணிகளான என்.கொடித்துவக்கு மற்றும் சுங்க அதிகாரி ஆர்.ரத்ன சிறி ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடபபட்டுள்ளது.

மொஹான் பீரிஸின் கடவுச் சீட்டை இரத்து செய்யுமாறு முறைப்பாட்டாளர்களால் கோரக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த விடயத்தை நடைமுறைப்படுத்தாமையால், இந்த விடயம் தொடர்பில் ஆணைக் குழுவிற்கு உத்தரவிடுமாறு முறைப்பாட்டாளரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் ரீட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்

பெயர் : சு.குகாஜினி
முகவரி: மணலடைப்பு, இளவாலை.



அகவை 10 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................

..............................
பெற்றோர் கையொப்பம்

# இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால் பதிலடி

## இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



(வொஷிங்டன்)

இந்திய நகரங்கள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் அடுத்த தாக்குதலை நடாத்தினால், பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்க தயங்காது. முந்தைய காலத்தில் பின்பற்றப்பட்ட அமைதியான வழிமுறையை இனிமேல் இந்திய தலைமையிடம் எதிர்பார்க்க முடியாது, என, இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக பணியாற்றிய, ரொபர்ட் பிளாக்வெல் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை இலாகாவில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், ரொபர்ட் பிளாக்வெல் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறும்போது,

மும்பையில் நடந்தது போன்ற தாக்குதலை, பாகிஸ்தான் அரசு அல்லது அந்நாட்டு உளவு அமைப்பான, ஐ.எஸ்.ஐ.எஸ், அல்லது தீவிரவாதிகள் நடத்தினால், அதை இனிமேல் இந்தியா பார்த்துக் கொண்டு இருக்காது தூதரக ரீதியில் அந்தப் பிரச்சினையை தீர்க்க முயலாது, என்றார்.

இதை, அவரின் கணிப்பு என்று கூறிய பிளாக்வெல், இந்திய மக்களின் மனநிலை, புதிய பிரதமர் மோடியின் விருப்பமும் இப்படித் தான் உள்ளது என்றும் கூறினார். அவர் போலவே, அமெரிக்காவின் புரூக்கிங்ஸ் கல்வி நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் ஸ்டீபன் கோஹெனும் கூறினார்

# கட்டாய மதமாற்ற விவகாரம் மோடி கண்டுகொள்ளவில்லை

## சுட்டிக்காட்டுகிறது நியூயோர்க் டைம்ஸ்



(நியூயோர்க்)

கட்டாய மதமாற்றம் உள்ளிட்ட விவகாரங்களில் பிரதமர் நரேந்திர மோடி மௌனம் காத்து வருவது கண்டனத்துக்குரியது என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிக்கை தலையங்கம் எழுதியுள்ளது. டில்லியில் கிறிஸ்தவ ஆலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாக கண்டித்து நியூயோர்க் டைம்ஸ் தாய் மதம் திரும்புதல், என்ற பெயரில் இந்துத்துவா நடாத்தும் கட்டாய மதமாற்றம், துயோடு விளையாடுவதை போன்றது என கடுமையாக விமர்சித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் அயோத்தியாவில் விஸ்வ ஹிந்து பரிஷத் நடாத்த திட்டமிட்டுள்ள பிரமாண்ட மதமாற்ற நிகழ்ச்சிக்கு எதிராக மோடி இதுவரை ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்று குற்றம் சாட்டியுள்ள அந்த பத்திரிக்கை வலது சாரி ஹிந்துத்துவாக்களை கட்டுபடுத்தவோ, கண்டிக்கவோ மோடி விரும்பவில்லை என்பதையே இது காட்டுவதாக கண்டனம் தெரிவித்துள்ளது.

# காசா உயிரியல் பூங்காவில் உணவின்றி இறக்கும் மிருகங்கள்



உண்ண உணவின்றி மிருகங்கள் அனைத்தும் சடலங்களாக மாறி வரும் கோர சம்பவம் கர்சா உயிரியல் பூங்காவில் வாடிக்கையாகிவிட்டது.

பாலஸ்தீன நாட்டின் எல்லையில் உள்ள காசா பகுதியில் கான் யூனிஸ்(Khan Younis) என்ற உயிரியல் பூங்க ஒன்று உள்ளது. இங்கிருந்த சிங்கம், புலி, மான், குரங்கு, முதலை, நெருப்பு கோழி உள்ளிட்ட விலங்கினங்களுக்கு உணவு கொடுக்கப்படாததால், சுமார் 65 விலங்குகள் பசியால் எலும்பும் தோலுமாக மாறி இறுதியில் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இதுகுறித்து பூங்காவின் உரிமையாளர் முகமது அவைடா (Mohammed Awaida) கூறுகையில்,

இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கு இடையே தாக்குதல்கள் தொடரந்து நடந்து வருவதால், இங்கு மிருகங்களை பராமரிக்க எந்த பணியாளரும் முன்வருவதில்லை. கடந்த 2007ஆம் ஆண்டு ஒரு மிருகக்காட்சியை தொடங்கிய போதும், என்னால் அதை பராமிக்க இயலாததால் பல விலங்குகளை இழக்க நேரிட்டது என வருத்தத்துடன் கூறியுள்ளார்.

# கிளர்ச்சி படையினர் தாக்குதல் சிரியாவில் 82 பேர் உயிரிழப்பு




சிரியாவில் கிளர்ச்சி படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற பகுதியில், அதிபர் ஆதரவு விமானப்படையினர் நடாத்திய ரொக்கெட் வீச்சில் 82 பேர் பலியாகினர். டமாஸ்கஸ்சில் கிளர்ச்சி படையினர் நடாத்திய ரொக்கெட் வீச்சில் 10 பேர் கொல்லப்பட்டதற்கு இது பதிலடி ஆகும்.

சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சி நடந்து வருகிறது. இதில், கிளர்ச்சியாளர்களுக்கும், அதிபர் ஆதரவு படையினருக்கும் இடையே நடந்து வரும் உள்நாட்டு சண்டைகளில் இதுவரை 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. புள்ளி விவரம் கூறுகிறது

மதத்தின் பெயரால் அமைந்த கிளர்ச்சி படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகிற கிழக்கு கூத்தா மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இரவில் தொடங்கி, அதிபர் ஆதரவு விமானப்படையினர் தொடர்ந்து ரொக்கெட்டுகளை வீசினர். இதில் 82 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 12 குழந்தைகளும் அடங்குவார்கள்.

சிரியாவில் இப்படி வான்தாக்குதல்கள் நடத்துவது அபூர்வமான ஒன்று அல்ல என்ற போதிலும், மதத்தின் பெயரால் அமைந்த அந்த கிளர்ச்சிப்படையினர், மக்கள் குடியிருப்புப்பகுதியில் ரொக்கெட் வீச்சு நடாத்தி 10 பேரை கொன்று குவித்ததற்கு, விமானப் படையின் பதிலடியாக இது அமைந்துள்ளது என கூறியது.

# சிறுவனின் செயலால் நடந்த விபரீதம் கடைத்தொகுதி தீப்பற்றி 17பேர் பலி



சீனாவில் 9 வயது சிறுவனால் கடைத்தொகுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் 17 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் குவாங்டாங் (Guangdong)மாகாணத்தில் உள்ள ஹூயிங்டாங் கண்டிரியில் (Huidong county)உள்ள கடைத்தொகுதியில் 4 வது மாடியில் குடோன் ஒன்று உள்ளது.

அங்கு பெற்றோருடன் வந்திருந்த 9 வயது சிறுவன், தனது கையில் உள்ள லைட்டரில் இருந்து நெருப்பை வரவழைத்து விளையாடியிருக்கிறான். அப்போது எதிர்பாராதவிதமாக அந்த தளம் முழுவதும் தீ பரவியுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற சுமார் 270 தீயணைப்பு விரர்கள், கடுமையான போராட்டத்திற்குப் பிறகு தீயை கட்டுப்படுத்தியுள்ளனர். இந்த விபத்தில் 17 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர், மேலும் 4 தீயணைப்பு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். இந் நிலையில் தீ விபத்துக்கு காரணமான 9 வயது சிறுவன், விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளான்.

# இலங்கை திரும்பும் அகதிகள் தகவல் சேகரிக்கும் "கியூ" பிரிவு

இலங்கையில் நடந்த போரால் அங்கிருந்து தப்பி வந்த பலர் இந்தியாவின் தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் அகதி முகாம்களில் உள்ளோர் விரும்பினால், இலங்கைக்கு திரும்பலாம் என்ற வாய்ப்பு உருவாகியுள்ளது. இதற்காக அரசுத் துறை சார்ந்த ஆய்வும் நடக்கிறது. சொந்தநாடு திரும்ப விரும்புவோர் குறித்து தகவல் சேகரிக்க தமிழக "கியூ" பிரிவு பொலிஸாருக்கு உத்தரவு வந்துள்ளது. கியூ பிரிவு பொலிஸார் கூறுகையில்,

ஒவ்வொரு முகாமிலும் 50 சதவீதத்தினர் சொந்த நாடு செல்ல விரும்புகின்ற்னர். இலங்கை தமிழர் பகுதியில் சொந்த வீடு, நிலம் வைத்திருப்போர் வாய்ப்பு இருந்தால் உடனே அனுப்ப கூறுகின்றனர். அரசியல், அமைப்பு ரீதியான ஆர்வத்தில் இருப்போரும் அங்கு செல்ல விரும்புகின்றனர். முழு விவர அறிக்கையை மேலிடத்திற்கு அனுப்புவோம், என்றனர்.


# எகிப்தில் குண்டு மழை 27 தீவிரவாதிகள் பலி

எகிப்து நாட்டில் சினாய் தீபகற்பப் பகுதியில், ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவான தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

எகிப்து அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இவர்கள் ஆயுதம் ஏந்தி போராடி வருகிறார்கள். இந்த நிலையில் இவர்களை குறிவைத்து சினாய் தீப்கற்ப பகுதியில் எகிப்து இராணுவம், ஹெலிகொப்டர்கள் மூலம் குண்டு மழை பொழிந்தது. இதில் 27 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். சமீபத்தில் எகிப்து இராணுவம் நடாத்திய மிகப்பெரிய வான்தாக்குதல் இதுதான் என தகவல்கள் கூறுகின்றன.

# பொது இடத்தில் காதலர் தினம் கொண்டாடுபவர்களுக்கு திருமணம்

## இந்திய மகா இந்து அமைப்பு எச்சரிக்கை



காதலர் தினத்தன்று பொது இடங்களில் காதலர்களை கண்டால், அவர்களுக்கு திருமணம் செய்து வைப்போம். மறுத்தால் பெற்றோருக்கு தெரியப்படுத்துவோம் என இந்தியாவிலுள்ள இந்து அமைப்பு நூதன எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 14ஆம் திகதியை காதலர் தினமாக உலகம் முழுவதும் உள்ள காதலர்கள் கொண்டாடி வருகின்றனர். அந்த தினத்தில், காதலை சொல்வது, காதலிக்கு ரோஜா, பரிசுகளை கொடுத்து அசத்துவது போன்றவற்றில் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். இது இந்தியாவிலும் வேகமாக பரவி வருகிறது. இந்நிலையில், இந்து மகாசபா அமைப்பின் தலைவர் சந்திர பிரகாஷ் கவுசிக், காதலர் தினம் கொண்டாடுவதை கண்டித்து காதலர்களுக்கு நூதன எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது,

காதலர் தினத்தன்று ஷொப்பிங் மால், பூங்கா உள்ளிட்ட பொது இடங்களில் காதலர்களை கண்டால் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்வோம். இதற்கான நாட்டின் முக்கிய நகரங்களில் பல பகுதியிலும் எங்கள் குழுவினர் செல்ல உள்ளனர். திருமணம செய்ய மறுத்தால் காதலர்களின் பெற்றோருக்கு விடயத்தை தெரியப்படுத்துவோம்.

# முறையற்ற பண வசூலிப்பு

# வடக்கு பாடசாலைகளுக்கு தடை

வடமாகாண பாடசாலைகளில் கல்வியினை கற்று வருகின்ற மாணவர்களிடமும் தரம் ஒன்றில் புதிதாக சேர்ந்து கொள்ளவுள்ள மாணவர்களிடமும் முறையற்ற வகையில் நிதி சேகரிப்பது முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சினது சுற்றறிக்கையின் பிரகாரம் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ. இரா.சேந்திரா வடமாகாணத்தில் உள்ள அனைத்து கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவித்தல்களை அனுப்பியுள்ளார்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் முறையற்றவகையில் நிதி சேகரிப்பில் ஈடுபாடாதவகையில் கண்காணிப்புகளை கவனத்தில் கொள்ளுமாறும் கல்விப்பணிப்பாளர்களை மாகாணக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# சக்திவாய்ந்த குண்டு கண்டியில் மீட்பு

கண்டி, பொல்கொல்லயில் ஆற்றுக்கும், பிரதான பாதைக்கும் அருகில் உள்ள மூங்கில் மரங்களுக்கு அருகே உள்ளபாலத்தின் கீழ் யுத்த பீரங்கியை தாக்குவதற்கு பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த வெடி குண்டு ஒன்று மீட்கபட்ட்டுள்ளது.

பிரதேசவாசி ஒருவர் பாலத்தின் கீழ் இருந்து குறித்த குண்டை இனங்கண்டு பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வெடிகுண்டு மீட்கும் குழுவினரின் உதவியுடன் வந்த பொலிஸார் குண்டை செயலிழக்க செய்ததுடன் இந்த குண்டு தொடர்பில் கட்டுகஸ்தோட்டை மற்றும் வத்தேகம பொலிசார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஐ.நா.மனித உரிமை ஆணையரை இலங்கைக்கு வர அழைப்பு

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனை, இலங்கைக்கு வருகை தருமாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றைய தினம் அதிகாரபூர்வமாக அழைப்பை அனுப்பி வைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பயணம் தொடர்பான ஒழுங்குகள் ஏதும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு ஒரு ஆண்டுக்குள் அழைப்பு விடுப்பதாக இலங்கை இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொலை அச்சுறுத்தல் விடுத்த இலங்கைத்தமிழர் கனடாவில் கைது



கனடாவின் அரசாங்க, இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தல்களை விடுத்து வந்த ரொரன்ரோவைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் ஒருவரை கனேடியப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஒன்ராரியோ மாகாணத்தில் இருந்து கிடைத்த பல முறைப்பாடுகளை அடுத்து, தாம் 51 வயதான, ரூபன் பலராம் சிவராம் என்ற இலங்கைத் தமிழரைக் கைது செய்துள்ளதாக கனேடிய பொலிஸ் தெரிவித்துள்ளது.

உயர்மட்ட அரசியல்வாதிகளில் இருந்து மூத்த பொலிஸ் அதிகாரிகள் வரை இவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். மேலும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கும் கூட அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என கனேடிய பொலிஸ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட இவர் மின்னஞ்சல் மூலமும், தொலைபேசி மூலமும், கொலை அச்சுறுத்தல் விடுத்தும், வெறுக்கத்தக்க பரப்புரை செய்தும், மக்களைத் துன்புறுத்தியுள்ளார். இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்ததற்கான காரணம் தெரியவரவில்லை. விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.இவரது கணனியும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது.இவர் நூற்றுக்கணக்கான மக்களுக்கு மின்னஞ்சல் மூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட இவர்,தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது ஏற்கனவே குற்றவியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளும், மூன்று கொலை அச்சுறுத்தல் குற்றச்சாட்டுகளும், சுமத்தப்பட்டுள்ளன. மேலதிக குற்றச்சாட்டுகள் இன்னமும் பதிவாகவில்லை. இன்னும் பலர் வந்து முறையிடலாம் என்றும் கனேடிய பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை மாணவன் இத்தாலியில் மரணம்

தனது பெற்றோருடன் இத்தாலியில் வசித்து வந்த இலங்கையைச் சேர்ந்த மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் வீட்டில் திடீரென உயிரிழந்துள்ளதாக அம்மாணவரின் உறவினர்கள் தெரிவித்துள் ளனர்.

பண்டிருப்பு, லுனுவில பிரதேசத்தில் வசித்த வர்ணகுலசூரிய எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று காலை பாடசாலை செல்ல தயாராகிக் கொண்டிருக்கும் போது திடீரென கட்டிலில் விழுந்த மாணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

## ஐ.நா.வின்...

இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் உள்நாட்டு விசாரணைகளை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்,

நிச்சயமாக நாம் அதனை வரவேற்கிறோம். இலங்கையில் என்ன நடந்தது என்பதை வெளிசத்துக்குக் கொண்டு வர உதவும் எந்த நகர்வையும் நாம் வரவேற்போம்.

ஆனால், ஐ.நா. விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என்பதே, ஐ.நா பொதுச்செயலரினதும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரினதும் அழைப்பாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# கட்சி தாவும் எம்.பி.களுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்து

## வருகிறது புதிய சட்டம்

கட்சித் தாவலைதடுக்க விசேட சட்ட மூலமொன்றை கொண்டு வர புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசியல் கட்சி அல்லது சுயாதீனக் குழு ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், கட்சி தாவினால் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை ரத்து செய்யும் வகையில் சட்டத் திருத்தம் மேற் கொள்ளப்பட உள்ளது.

அரசியல் சாசன சட்டத் திருத்தங்களின் போது இந்த விடயமும் உள்ளடக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதி செயற்படுவார் எனவும், பிரதமரின் ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் உச்ச வரம்பு எண்ணிக்கை 40 ஆகவும் வரையறுக்கப்பட உள்ளது.

நாடாளுமன்றின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 18ம் திருத்தச் சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்கள் மீள நிறுவப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## வாள்வெட்டில்...

குழுவினர், அவர் மீது திடீரென வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர். சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த செல்வராசா உதயராசா (வயது 34) என்பவரே படுகாயமடைந்தார். தலையிலும் கையிலும் படுகாயமடைந்த இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

## காதலித்து...

வெற்றிபெற்று கதிரையேறியதும் அவரது செயற்பாடுகள் முற்றாக மாற்றமடைந்துள்ளன.

அண்மைக்காலமாக கூட்டமைப்பு எம்.பி ஒருவரின் எடுபிடியாக வசதிகள் மற்றும் வாகன வசதிகளென அனைத்தையும் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் குடும்பமாக வாழ்ந்துவந்திருந்த பெண்ணை கைவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட தனக்கு நியாயம் கேட்டுப்போயிருந்த பெண்ணை மிரட்டி கலைத்துள்ள அந்நபர் அவரை அச்சுறுத்தியிருப்பதுடன் தனக்கு பெற்றோர் வேறு திருமணம் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே குறித்த யுவதி தற்கொலை முயற்சியில் குதித்துள்ள்தாக தெரியவருகின்றது

## இப்பிரச்சினையை...

பங்கேற்றது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ள, எக்கனொமிக் ரைம்ஸ், இந்த சாதகமான மாற்றங்களை இந்தியா வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தச் செயற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும்,, புதிய அரசாங்கம் நாட்டின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, 13ஆவது திருத்தச்சட்டத்தின் மீது கையெழுத்திட்ட தெளிவான அரசியல் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இலங்கை விவகாரத்துடன் தொடர்புடைய இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும், எக்கனொமிக் ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

வாறு தேர்தல் நடத்தப்பட வேண்டி இருப்பதாகவும், இந்த நிலையில் அந்த உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துமாறும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

## பொலிஸாரின்...

தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமர்வில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு செலவுத்திட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

புதிய அரசாங்கம் எரிபொருள் விலையை குறைத்திருப்பதையிட்டு வரவேற்கின்றோம். எனினும் எரிபொருள் விலையானது கொழும்பில் ஒரு விலையிலும் வடக்கில் மற்றொரு விலையிலும் விநியோகிக்கப்படுகின்றது. எனவே இவ்விடயத்தில் நிதி அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் எரிபொருள் விலை குறைப்பானது நாட்டின் அனைத்து மக்களும் அனுபவிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

வடக்கில் இடைநிறுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

இதேவேளை இரட்டைக் குடியுரிமையில் இருந்து வந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விளைந்திருப்பது தொடர்பில் நாம் எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலைமாறி தற்பொழுது 7ஆக குறைந்துள்ளது. அங்கிருந்த மக்கள் புலம்பெயர்ந்ததன் காரணத்தினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே புலம்பெயர் சமூகத்தினருக்கும் வாக்குரிமை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அத்துடன் புலம்பெயர்ந்தோர் இங்கு வாக்களிப்பதை சட்டரீதியில் ஏற்படுத்துவதற்கு வகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் வடக்கில் பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள நிலங்களை மீட்டு மீண்டும் மக்களிடத்தில் கொடுப்பதற்கும் அரசியல் கைதிகளாக இருப்போரை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற அதேவேளை எமது கடல் வளம் சூறையாடப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு செயற்படுமாறு புதிய அரசாங்கத்தை கேட்கின்றோம்.

இதேவேளை பொலிஸாருக்கு உரிய அதிகாரத்தை இராணுவத்துக்கும் வழங்கியிருப்பதன் காரணத்தால் தமிழ் மக்களிடத்தில் பாரிய அச்சமும் சந்தேகமும் எழுந்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானியும் வெளியிடப் பட்டுள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

## உயர்பாதுகாப்பு..

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

இடம்யெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் அக்கறை கொண்டிருக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படும்.

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்ற வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களினதும் ஏனைய மக்களினதும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டியதில்லை.

அதேபோன்று தற்போது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள படையணிகளைக் குறைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

இதுதொடர்பாக வடக்கில் உள்ள மக்களுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் ஏனைய தரப்பினருடனும் கலந்து பேசி உரிய தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும், நேற்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும், பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்த ருவான் விஜேவர்த்தன இன்று திருகோணமலையில் பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்யவுள்ளார்.

# மாத்தளையில் மீட்கப்பட்டது ஜனாதிபதி செயலக வாகனம்



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் டிபெண்டர் ரக வண்டியொன்று மாத்தளை வல்லிவெனல பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றிலிருந்து மஹவெல பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இணைப்புச் செயலாளர் ஒருவர் இந்த வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா; யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 28 மற்றும்மார்ச் 01ஆம் திகதிஇடம்பெறவுள்ள கச்ச தீவுபுனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவிற்கான ஏற்பாடுகள் தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கச்சதீவு திருவிழாவை சிறப்பாகநடாத்துவதற்கானஏற்பாடுகள் தொடர்பாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க மற்றும் அந்தந்த துறைசார்ந்தவர்களுடன்கலந்துரையாடப்பட்டது.

யாத்திரிகர்களின் உணவு, சுகாதாரம், குடிநீர் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டது மேலும் யாழ்.குறிகட்டுவனில் இருந்து கச்சதீவுவரை படகுப் போக்குவரத்தில் ஈடுபடவுள்ள்ள தனியார் படகுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அதற்கான அனுமதிகளை வழங்குமாறும் ஒவ்வொரு படகுகளிலும் உயிர்காப்பு அங்கிகளை பயன்படுத்துமாறும் தனியார் படகு உரிமையாளர்சங்கத்தினரிற்கு அரசாங்க அதிபர் இதன் போதுகோரிக்கை விடுத்தார்.

மேலும் இக்காலப்பகுதியில் ஒருவருக்கான படகுச்சேவை கட்டணமாக ஒருவழிப்பயணத்திற்கு ரூ 225 அறவிடப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் யாழ். நகரிலிருந்து குறிகட்டுவான் வரைஎதிர்வரும் 28 ஆம் திகதிகாலை 6 மணியிலிருந்து நண்பகல் 2 மணிவரை தனியார் மற்றும்அரச பேருந்துகள் தொடர்ச்சியாக சேவையில் டுபடவுள்ளன.

அந்தோனியார் ஆலய பூசை வழிபாடுகள்01.03.2015 அன்று காலை 6 மணியளவில் இடம்பெற உள்ளதால் அன்றைய தின்ம் காலை 10 மணியிலிருந்து கச்சதீவிலிருந்துபக்தர்கள் மீளதிரும்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவிலிருந்து பக்தர்கள் வருகை தர உள்ளதால் அவர்களின் வசதிகளுக்காக இந்திய நாணயங்களை இலங்கை நாணயமாக மாற்றக்கூடிய ஏற்பாடுகளுடன் கச்சதீவில் ஒரு உற்சவ கால கிளையினை இலங்கை வங்கி அமைப்பதற்கும் கலந்துரையாடப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பிற்கெனநூற்றிற்கும் மேற்பட்ட இலங்கை பொலிஸார்கடமையில் ஈடுபடுத்தபடவுள்ளனரென பொலிஸ் திணைக்களத்தினர் நேற்றைய தின கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

மேலும்கச்சதீவிற்கு வரும் பக்தர்களுக்கு குடிப்பதற்காக வழங்கப்படும் நீரானதுசுகாதாரபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே வழங்கவேண்டுமென பொது சுகாதாரபரிசோதகர்களுக்கு அறிவுறுத்திய அரசாங்க அதிபர் இம்முறைகச்சதீவு பெருவிழாவிற்கு இந்தியாவிலிருந்து 3500 இற்கு மேற்பட்ட யாத்திரிகர்களும் இலங்கையிலிருந்து 3500 இற்கு மேற்பட்டமாக மொத்தமாக 7000 இற்கு மேற்பட்டயாத்திரிகர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதன்போது தெரிவித்தார்.(25)

# தட்டுப்பாடின்றி சந்தைக்கு அரிசி

அரிசியை தட்டுப்பாடின்றி சந்தைக்கு கொண்டு செல்வதற்கு உணவுப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

நெற்களஞ்சியசாலைகளில் தற்போது காணப்படும் நெல் உட்பட புதிய களஞ்சியசாலைகளில் காணப்படும் நெற்தொகைகளை தேடி பார்க்கவும், நெல்விற்பனை சபை அதிகாரிகளை அநுராதபுரம், நிகவெரட்டிய, பொலனறுவை, ஆகிய பகுதிகளில் காணப்படும் களஞ்சியசாலைகளை பரிசோதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# பொதுபலசேனவை அழிப்பதற்கு மேற்குலகுடன் சந்திரிக்கா கூட்டு

## குற்றம் சாட்டும் ஞானசார தேரர்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்குலக சக்திகளுடன் இணைந்து தம்மை அழிக்க முயற்சிப்பதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க எம்மை நாய் சேனா என்கிறார். எம்மில் சிலரையே அவர் அப்படிக் கூறுகிறார்.

இந்த அம்மையார் ஓய்வுபெற வேண்டியவர். அவர் மேற்குலக சக்திகளுடன் இணைந்து அவரது விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றி வருவதுடன் எம்மை இல்லாமல் செய்ய முயற்சித்து வருகிறார்.

முஸ்லிம்கள் சிலருக்கு முன்னால சுதந்திர தினத்தை அனுஷ்டித்து விட்டு சூரா பேரவைக்குச் சென்று விரிவுரையாற்றிய எம்மை நாய் சேனா என்று கூறியுள்ளார்.

முஸ்லிம் அமைப்பொன்றின் விரிவுரையில் அவர் இதனை தெரிவித்திருப்பது என்பது இவருக்கு சிறுபான்மை மேனியா இருப்பதை காட்டுகிறது. பெரும்பான்மை பற்றி அம்மையாரிடம் எந்தக் கதையும் இல்லை.

பௌத்தர்களுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பில் இவர்களுக்கு எந்த அக்கறையுமில்லை. நாட்டில் வெற்றி பெற்றிருப்பது மைத்திரிபால சிறிசேன அல்ல. நாட்டுக்கு எதிராக வேலை செய்தவர்களே வெற்றி பெற்றுள்ளனர்.

இது பிரபாகரனை விடுதலைப் போராளி என உலகத்திற்கு கூறியவர்கள் வெற்றி. இதனால், இவர்கள் தற்போது நிம்மதியாக நித்திரை கொள்வார்கள் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# மிதக்கும் ஆயுதக்கப்பல் மூலம் கிடைத்த வருமானம் எங்கே?

## நடத்தப்படுகிறது விசாரணை

மிதக்கும் ஆயுதக் கப்பலின் ஊடாக கிடைத்த வருமானம் எங்கு கொண்டு சென்றது என்பது குறித்து விசாரணை நடாத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரத்ன லங்கா மற்றும் அவன்ட் க்ரேட் ஆகிய தனியார் நிறுவனங்களின் ஆயுதங்கள் தொடர்பில இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு நிறுவனங்களுடனும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமான தொடர்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மிதக்கும் ஆயுதக் கப்பலின் ஊடாக திரட்டப்பட்ட வருமானம் எங்கு சென்றது என்பது பற்றியே விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். மிதக்கும் ஆயுதக் கப்பலுக்கான அனுமதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் நிறுவனமொன்று பாரியளவில். ஆயுதங்களை பேணுதல் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். பக்கச்சார்பற்ற முறையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மன உளைச்சலால் அவதியுறும் சிறுவர்கள் முறையிட ஏற்பாடு

(கொழும்பு)

சிறுவர்களின் மன ரீதியான உளைச்சல்கள் தொடர்பில் சிறுவர்களாலேயே முறையிடக்கூடிய சிறுவர் நட்பு தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தவதற்கு சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறுவர்களுக்கு ஏற்படும் மன காயங்கள், மன அழுத்தங்கள், மன ரீதியான உளைச்சல்கள் உள்ளிட்ட பிரச்சினைன்ளை குறித்த தொலைபேசி இல்க்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கலாம்.

சிறுவர்களுக்கு ஏற்படும் வன்கொடுமைகள், பல்வேறு தொல்லைகள், தொடர்பில் இதுவரை 1929 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு முறையிடப்பட்டது.

குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு மேலதிகமாகவே இப்புதிய தொலைபேசி பிரிவு அறிமுக்கப்படுத்தப்படவுள்ளதாக சிறுவர விவகார பிரிவு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் சிறார்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய, சிறுவர் மன நிலையை புரிந்து கொண்ட அதிகாரிகளுடன் இம்முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

மேலும் சிறுவர் விவகார அமைச்சர் ரோசி சேனாநாயக்கவின் ஆலோசனையின் பிரகாரம் இப்புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தவும், இதற்காக தனியான பிரிவொன்றை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# வற்வரி மோசடியில் ஈடுபட்ட 2 இலங்கையர் மலேசியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற பாரிய வற்வரி (VAT) மோசடியுடன் தொடர்புடைய இருவர் மலேஷியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இருவரும் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



இதில் ஒருவருக்கு 280 வருடங்களும் மற்றையவருக்கு 100 வருடங்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் ஊடகவியலாளர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கடந்த காலத்தில் நாட்டில் இருந்து வெளியேறிய ஊடகவியலாளர்களுக்கு எதிராக எந்த விதமான குற்றச்சாட்டுக்களும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டை விட்டுச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்தும் எந்த தயார் நிலைகளும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் காரணங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக அவர்கள் நாட்டை விட்டுச் சென்றனர்.

இவ்வாறு நாட்டை விட்டுச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு எதிராக புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத விசாரணைப் பிரிவு, விசேட விசாரணைப் பிரிவு, சர்வதேச பொலிஸ் உட்பட எந்த விசாரணைப் பிரிவுகளாலும் எவ்விதமான விசாரணைகளும் நடத்தப்பட மாட்டாது எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அப்பகன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.